An ordinary meeting of the Association was held on the 27th January 54. S. Sarojini of class II addressed the gathering on 'Common Music'. In the course of her speech she observed that the common music is widely different from classical music. Temple songs, workers' songs, and cradle songs may be classified as common music.

30th January 1954, Sarvodhaya Day was commemorated by the Association. We paid our homage in a solemn manner to the Father of the Nation whose life had been spent and sacrificed for his beloved country. We sang Bhajanas and Ramdhun while a few students were engaged in spinning. Sri. G. V. Govindaswamy Naidu hoisted the national flag at half mast and addressed the members. Verses were read from the Bhagavat Gita, the Bible, and the Koran.

Riddlez.

1 Fifteen before 'O' and five before 'E' That is the relationship between you and I. What is it ?

2 Two persons are walking in a street.
One person is the father of the other's son.
What is the relationship between them ?

3 A girl is working in a fruit stall. Her weight is 90 lbs. What does she weigh ?

4 Three persons are sitting on sea-shore but there are two fathers and two sons.
How can it be ?

5 A lady went to a hotel. When she left the place she wrote the following members in a paper and gave it to the manager. She had written " 1004180. " She gave no money. But the Manager did not say any thing. why ?

6 I am a word of five letters.
I am a noun.

If you cut my first letter I am an adjective.

If you cut my first two letters I am a verb.

If you take off my first three letters I am a preposition.

My last word is "T" who am I ?

B. Mythily

SRI G. V. G. VISALAKSHI COLLEGE.

SCIENCE ASSOCIATION

ANNUAL REPORT 1953-54.

At the business meeting of the Science Association held on 6th July 1953 the following office bearers for the year were elected :–

President: THE PRINCIPAL

Vice-President: MISS KELSIE BONNELL. M. A., Lecturer-in-Natural science

Secretary: T. M. RAJALAKSHMI Class I

The association was inaugurated on 14th August 1953 by Mr. S. Jesuratnam B. A. B. SC., Principal, Voorhees College, Vellore. The speaker in his inaugural address touched upon Botany, Physics and Chemistry-dwelling at length on atomic energy - a subject of very great interest in the realm of physics. The result of intensive research in this direction is the atom bomb whose effects on its poor victims are too well known to be described. For such disastrous results science has been blamed. Science is however only the slave of man and can be utilised most effectively for the betterment of mankind.

An ordinary meeting of the Science Association was held on 12th January 54 at 4–45 P.M. in the College Assembly Hall with the Principal in the chair. Regina Sundaraj of I. U. C. read a paper on "Migration of Birds" a most enthralling subject of the study of Bird Life. Red Indians actually named their calendar months after the arrival of birds. Migration is most developed in birds on account of their unparalleled powers of flight. When winter comes and food is scarce the birds migrate from a few miles to several thousands of miles. Migration has also been observed in fish, buffaloes, lemmings etc. The migration of lemmings is most dramatic. Long ago beyond Scandinavia there was a big land mass where ancestors of the lemmings used to migrate and through the land was submerged later, the lemmings persuaded by an instinct still rush across Norway and Sweden plunge into the sea and swim till they are drowned. Migration has not been thoroughly studied and a great deal of research work has to be done in the field.

The third ordinary meeting of the Science Association was held on 8th January 1954 at the College Assembly Hall with the Principal in the chair. Miss Rachel Jesuratnam B. SC., Lecturer-in-Physics spoke on the Atomic Clock, the latest development in Physical sciences, a new technique

for determining the age of dead plants and animal matter by measuring the radio activity contained in the body. Scrolls were found in a cave near Dead Sea and were given for study in American institute at Chicago by the Archbishop of Jerusalem who bought them from Beduins. Willard F. Libby a radio chemist of Chicago University reduced an ounce of the linen which wrapped the old parchment to charcoal and measured the radio activity. He found that it was made of flax which was alive 1900 years ago. Thus the atom instead of being used to destroy humanity can be utilised to extend the boundaries of Knowledge.

Another most enjoyable feature of our association's activities was the screening of Educational Films and full length pictures. These films were made available to us by the United States Information Service and the British Council to whose generosity we owe many pleasant hours we spent looking at the films like 'The development of the Rabit', 'World Garden', 'Latitude and Longitude', 'Human Body', 'Atomic Energy', 'Springs' and 'The grain that built a Hemisphere'. The Educational value of these films cannot be exaggerated and many thanks are due to the USIS and BIS for sending us these films regularly.

The valedictory meeting of the Association was held on 20th January 1953 when Mr. D. Samuel Raj, M. A., Professor of Zoology Alagappa Chettiar College, Karaikudi delivered the most interesting address on "The wonderland of insects".



The Annual Report of the Hostel Students' Association for the year 1953--54.

The Sri Visalakshi College Hostel has drawn its students from many different language areas; yet the feeling of belonging to a community is prevalent here. Our students realize fully well that bricks and mortar alone cannot make a hostel - there must be something more. The hostel is the building plus all the human factors - the ideals, hopes and aspirations of the inmates.

A business meeting of the Association was held on the 6th July 1953 with the Principal in the chair. The Principal welcomed the members and explained to them the pleasures and difficulties of hostel life. She said that the hostel was a real community held together by a common purpose and by a discipline which was necessary to ordered college life.

The office bearers for the year 1953–54 were as follows.

President: The Principal

Vice-President: Miss Lilly Nair, B. A. (Hons.) Lecturer-in-English.

Secretary: Regina Jeyakumari, Class I.


Last year we made a modest beginning as a residential college when eleven students shared one spacious room lent to us by the High School. But this year we were fortunate to get a building of our own. The hostel has on its rolls 35 members. The opening ceremony of the new hostel was celebrated on 6th August 53. The hostel was festooned and illuminated and the whole college had put on a festive appearance. The candle-light ceremony at 6 p. m. was solemn and very impressive. The members of the staff and the students dressed in white stood in a circle around a kuthuvilakku. The Principal first lit her candle taking the light from the sacred lamp. The members of the staff and the students took their lights from hers. While the ceremony was going on Mrs. Packianathan read suitable passages from Tagore.

On the 26th of August 1953 the members of the Association organised a reception to Mrs. Ganesan, Lecturer-in-Mathematics, when she returned to the College as a newly married bride. The Principal welcomed her back into our midst and offered her on behalf of the members of the staff and students our felecitations and good wishes. An address was presented to Mrs. Ganesan by the students. Mrs. Ganesan thanked the students for their affection.

SENIOR ENGLISH GROUP



ASSOCIATIONS' SECRETARIES



AT
CAPE
COMERIN



The First Terminal Function of the Hostel Students' Association was held on 11th Sep. 1953. Mr. E. W. P. Thomas, Professor of English of the Jamal Mohammed College was the chief guest. The resident students were At Home to the non-residents. The evening's programme commenced with a meeting at the Assembly Hall. Mr. Thomas gave us a very clear and comprehensive idea of the manners and customs of the people of Punjab where he had spent 14 years of his life. The meeting was followed by a short entertainment consisting of a Tamil farce and a pantomime depicting the life of Mary Magdalen. The snake charmer's dance by Miss R. Jesuratnam and M. Pitchammal Class II was superb and held the audience spell-bound.

The Second Terminal Function of the Hostel Students Association was held on 2nd December 53. Mrs. R. Chelliah B. A. L. T., the wife of the District Munsif, Udamalpet, was our guest of honour. The function began with a tea. We then had some interesting games of which the most exciting was the Treasure Hunt. Mrs, Chelliah spoke on hostel life in colleges. She dwelt on the advantages we derived by being a resident student. She said that in a hostel students learn to live a fuller life and enrich their personalities by their contact with other students. She exhorted the students to develop not only their mental powers but also to remember that ones mental well being depended very largely on ones physical health. She asked them to make full use of the opportunities given to them so that when they left college they should to remember be able these days with pleasure.

The Karthigai Deepam, Divali and Saraswathi Pooja were celebrated on a grand scale by those of the students who could not go home. We were able to arrange an excursion to the Thirumurthi Hills during the first term.

We have endeavoured to keep in mind the difficulties and struggles of parents to keep their daughters in College in these days of economic stress. Our students pay Rs. 20 per month which includes hot water baths and weekly oil baths.

If our students are able to look back with joy and yearning on the days they have spent with us we shall be amply rewarded for our sincere efforts to provide a healthy and happy life in the Sri Visalakshi College.

The Valedictory meeting was held on February 6th 1954 with Mr. P. R. Ramakrishna M. SC., as the guest of honour. He addressed the members on LIFE IN U. S. A. . This was followed by a carinval and film show.

Our thanks is due to Dr.Mrs. Francis who by her cheerful presence and able medical help has been successful in keeping the students in good health.



Answer :- 1 Love 2 Husband and wife
3 Fruit 4 Grand father, father and son
5 I owe not for I ate not 6 Wheat.

ANNUAL REPORT OF
THE
Sri G. V. G. Visalakshi College, Udamalpet.
1953-54.

" YOU CANNOT CHOOSE YOUR BATTLEFIELD
THE GODS DO THAT FOR YOU
BUT YOU CAN PLANT A STANDARD
WHERE A STANDARD - NEVER FLEW " —— that has been the spirit and faith with which SRI VISALAKSHI COLLEGE was started in 1952. We are attempting to plant a standard in this College in Udamalpet and the flags that unfurl in the history of this College for the students for many years shall be the flags of knowledge, culture, truth, beauty, goodness and godliness. Towards that end we shall all strive and educate our students to take up their roles in life as worthy daughters of India. Before reviewing the years achievements I send up a prayer of our aspirations to God Almighty

" Common be our prayers
Common be our end
Common be our purpose
Common be our deliberations
Common be our desires
United be our hearts
United be our intentions
Perfect be the union amongst us ".

The Second College Day has dawned for us with a sense of deep gratitude to God Almighty for his great guidance in all our problems and aspirations and we have progressed with speed, sometime struggling against difficulties. Early in June 1953 the University accorded us affiliation in Natural Science, Physics, Chemistry and Ancient History with provision for about 24 students in Group II and 8 in Group I. 32 students were admitted of which 5 were for Group I, 24 for Group II and 3 for Group III. The College has now on its rolls a total of 49 students. 17 students in the Senior Intermediate will be taking the University examination in March.

STAFF.

Owing to the expansion of courses additional members were appointed on the staff of the College; Miss K. Bonnell, M. A. as Lecturer-in-Natural Science, Mrs. K. Narayan B. Sc., (Hons) as Lecturer-in-Chemistry and

Miss R. Jesuratnam B. Sc., as Lecturer-in-Physics. Miss D. Sukumari B. A., Lecturer-in-Music was appointed in the place of Miss Thulasy and Mrs Meera Shenoy M. A., Lecturer-in-Logic in the place of Miss H. James. Miss M. Santhamma M. A., B. Ed, Lecturer-in-History and Miss Lilly Nair B. A., (HONS) Lecturer-in-English were appointed owing to the increase of work in the History and English departments. Miss P. Radha B. A., DBV., was appointed in October 1953 as Lecturer-in-Hindi.

ASSOCIATIONS.

The College Union functions as the main body of all our Associations. The Science Association, The Historical Association, The Tamil Sangam, The Athletic Association, The Hostel Students Association, The Fine Arts Association have all been fully engaged in varied activities throout the year. One member of the Faculty has been serving as the Vice-President for each of the Associations. Among our guest-speakers for the year were Mr. A. S. P. Iyer I. C. S., Judge, High Court, Madras, S. Jesuratnam B. A., B. SC., Principal, Voorheese College, Vellore; Mr. Victor Sargunaraj of Ethiopiah; Mr. K. S. Mahadevan, Government Arts College, Coimbatore, The Rev. W. Lillee Church of South India, Karur; Mrs. Mona Hensman, M.A., Principal, Ethiraj College, Madras; Mr. E. W. P. Thomas M. A., Jamal Mohammed College, Trichy; Mrs Robert Chelliah, wife of the District Munsif Udamalpet, Professor C. S. Kamalapathy, M. A., Jamal Mohammed College, Trichy Mr. D. Samuelraj M. A. Alagappa Chettiar College, Karaikudi; Mr. V. N. Hari Rao M. A., Ph. D., Madura College, Madura; Mr. P. R. Ramakrishna Naidu M. SC., M.I.T., Editor, Nava India, Coimbatore; Mr. M. Venkataswamy of the Government Victoria College, Palghat; Miss M. Habak of the Danish Mission, Karunakarapuri and Mr. P. R. Kuppuswamy from Coimbatore. A few extraordinary meetings were held during the year when we had the pleasure of welcoming Sri K. V. Jaganathan M. A., Editor, Kalaimagal, Sri C. Subramaniam, Finance Minister, the Raja of Ramnad, Minister for Public Works, Mrs. Jothi Venkatachalam, Minister for Prohibition. In December 1953 Sri C. Rajagopalachariar paid us a visit.

We sent C. A. Thilakavathy cass II and B. Mythili class II to Coimbatore to participate in the Inter-Collegiate Tamil debate for the Rangaswamy Naidu Rolling cup. C. A. Thilakavathy class II won the gold medal. In September 1953 our students entered for the essay contest held by the SPCA Coimbatore District. S. Regina, class I won the second prize of Rs. 10/—. Our students participated in the 21st Coimbatore Olympics in December 1953 and secured the following places:—

Long Jump —	2nd place	—	Nalinasundari	class I.
	3rd place	—	Pitchammal	class II.
100 meter Race–	3rd place	—	Nalinasundari	class I.
	4th place	—	Pitchammal	class II.
Cricket Ball-throw-	4th place	—	U. V. Saroja	class I.

N. K. Leela and C. A. Thilakavathy class II represented the College at the University Inter-Collegiate debate in January 1954 held at the Ethiraj College, Madras. The first impetus to Social Service came to us when we became affiliated to the Coimbatore Federation of College Social Service leagues and we are glad that we were able to do some Social Service during the year. It was a modest begining this year when our League members visited the Venkatesa Mills creche and the village attached to Karunakarapuri. We acknowledge with thanks the receipt of a CARE food parcel through the kindness of Dr M. Peterson, Washington, U. S. A. which we have distributed to a large number of underprivileged children in a neighbouring village.

HOSTEL.

Two blocks of 14 rooms have been constructed to accomodate 35 students. Two Seniors have been alloted one room and 3 Juniors share a room. A vegetarian mess has been organised to cater to the staff and students and expenses are divided among all members. We have been able to keep the rates within Rs. 20/— per month. Medical help has been so kindly rendered by Dr. Francis, Civil Asst. Surgeon, Govt. Hospital, Udamalpet. Her great kindness, cheerful disposition and healing touch has served to keep out illness from the hostel.

SCHOLARSHIPS.

Four students in the Junior class and two students in the Senior class enjoy Backward Class Scholarships sanctioned by the Government of India. We have also instituted a Scholarship and Equipment Fund from which we have distributed some Scholarships to D. Catherine class II, N. Nagaratnam class II and P. K. Rajalakshmi class I., and B. Mythily class II.

EQUIPMENT.

A welcome addition to the College is the RCA 400 16mm sound Projector with microphone arrangements. The entire equipment was purchased in November 1953 through the kindness of Mr. P. S. Swaminathan. Rs. 1000/— was raised towards the payment by the efforts of the staff and students. Our thanks are due to all those kind friends who have contributed towards this fund. The Management has promised to pay the remaining Rs. 2500/—. This has enabled us to screen many films of educational value and has kept the students in touch with the world outside.

STAFF CLUB

The College Council consists of all the members of the Faculty and all matters of academic importance are brought before the Faculty meetings. For all our social purposes a Staff Club has been iustituted with the Principal as the President, Mrs. F. R. Packianathan M. A., L. T, Lecturer-in-English as

Vice-President and Mrs M. Shenoy B. A. (HONS) as Secretary. The social life among members of the Faculty has been a unique feature of this College, and it cannot be denied that many pleasant hours have been spent in the Staff Club room. This year's guest of honour for the Staff Luncheon Club held on 24—10 - 53 was Mrs. Hensman, Member of the Governing Council and Principal of the Ethiraj College, Madras.

It is with immense pleasure that we welcome Miss G. R. Samuel M.A., (U.S.A.) M. S., (U S. A.) T. D., (LOND.) Principal, St. Christopher's Training College, Madras to our College to deliver the College Day Address. She comes to us with a wide experience in the educational world and we feel sure that her visit to us will be a great inspiration.

I cannot close this report without expressing my deep and sincere sense of appreciation and thanks to all my colleagues who have laboured with me for the development of this College. The College has been taking form and features very quickly largely due to the right relationships between staff and students; staff and staff and staff and Principal. It is with a feeling of great pride that I can recall this year's record and growth of the College amid a cordial and happy atmosphere. We are all here to work with a spirit of devotion and our task is some what like weaving the threads of knowledge into a beautiful, many-sided and many-coloured pattern. We work on the Loom of Time with our faith, trust and confidence in God-our Father who leads us in the life-work of our College. The verse of Goethe is a suitable echo of our thoughts when I repeat along with him :-

" In currents of life, in tempests of motion
In fervour of act, in the fire, in the storm,

Hither and thither
Over and under,

* * * * * * * * *

Heaving and weaving
The change of life

At the whirring Loom of Time unawed
I work the living mantle of God

26—2—'54



P. Adiseshiah,
Principal.

" வேண்டுகோள் "

நாகரத்னம், II U. C.

தெய்வமே, எனக்கு இரண்டு சிறகுகள் கொடுக்க மாட்டாயா ? பாழ்பட்ட மனிதர் கூட்டத்தையும், அதன் கட்டுக்களையும், நோய்களையும், துன்பங்களையும், பொய்களையும், உதறி எறிந்துவிட்டு, நான் இன்ப வானத்திலே இச்சைப்படி பறந்து செல்ல மாட்டேனா ? ஆகா ! எத்தனை தேசங்கள் பார்க்கலாம் ! எத்தனை நாடுகள் ! எத்தனை பூக்கள், எத்தனை மலைகள், எத்தனை சுனைகள், எத்தனை அருவிகள், எத்தனை நதிகள், எத்தனை கடல் வெளிகள்! வெய்யில், மழை, காற்று, பனி இவை யெல்லாம் என்உடம்பிற்கு நன்றாய் பழக்கப்பட்டு இவற்றால் நோய்கள் உண்டாகாமல், எப்போதும் இன்ப உணர்ச்சிகளே உண்டாகும். இந்த நிலையை எனக்கு அருள் புரியலாகாதா ?

குருவிக்குப் பேசத் தெரியும்; பொய் சொல்லத் தெரியாது. குருவியில் ஆண் பெண் உண்டு; தீராத கொடுமைகள் இல்லை. குருவிக்கு வீடுண்டு; தீர்வை கிடையாது. குருவிக்கு உணவுண்டு, உழைப்புண்டு; நாயகனில்லை; சேவகமில்லை.

தெய்வமே, எனக்கு இவ்விதமான வாழ்க்கையைத் தரலாகாதா ? குருவிக்கு இல்லாத பெருமைகள் எனக்கும் சில அருள்செய்திருக்கிறாய் என்பது மெய்தான். ஆராய்ச்சி, பக்தி, இசை, கவிதை முதலிய இன்பங்கள் மனிதனுக்குக் கைகூடும்; குருவிக்கு இல்லை. ஆனாலும் இந்த இரண்டுவித இயல்பும் கலந்து பெற்றால் நான் பரிபூரண இன்பத்தை அடையமாட்டேனா ?

இந்தக் குருவி என்ன சொல்கிறது ? " விடு ", " விடு ", " விடு " என்று கத்துகிறது. இஃது நான் விரும்பிய இன்பத்திற்கு வழி இன்னதென்று தெய்வம் குருவித் தமிழிலே எனக்குக் கற்றுக் கொடுப்பது போல் இருக்கிறது.

" விடு, விடு, விடு " — தொழிலை விடாதே, உணவை விடாதே, பேட்டை விடாதே, கூட்டை விடாதே, குஞ்சை விடாதே, உள்ளக் கட்டை அவிழ்த்துவிடு, வீண் யோசனையை விடு. துன்பத்தை விடு.





நோயும் மருந்தும்.



C. A. திலகவதி, II U. C.

"இன்றைய இளஞ்சிறுர்கள், எதிர்காலப் புத்துலகின் சிற்பிகள்." உண்மைதான். கருத்துப் பொதிந்த இச்சொற்கள், பொதுமேடையேறி காரசாரமாக தீவிர வாதம் செய்யும் அரசியல் வாதியின் ஆணித்தரமான வார்த்தைகளல்ல. எண்ணற்ற எழுத் தோவியங்களைத் தீட்டி படிக்காத பாமர மக்களின் உளப்பண்பாட்டைத் திருத்தியமைக்கப் பாடுபடுவதாக சொல்லிக்கொள்ளும் பேனுவீரனின் கனல் தெறிக்கும் கருத்துக்களுமல்ல. விடுதலைப் போராட்டத்திலே தன் உடல் பொருள் ஆவியனைத்தையுமே தத்தம் செய்யத் துணிந்து, இமயத்தினும் கலங்கா உளவலி பூண்ட இந்தியப் பிதா அண்ணல் காந்தியாரின் பொன்மொழிகளே இவை. இன்றைய குழந்தைகள்; நாளைய இளைஞர்கள்; அவர்களே எதிர்காலத்தில் நாட்டின் நற்பாதையைத் தம் இன்ப உழைப்பால் செப்பனிடப்போகும் தொழிலாளிகள். இத்தன்மைத்தான அருஞ்செயற் சிற்பிகளின் அறிவுக்கண்ணைத் திறப்பதில் அரசியலார் மிக்க கவனம் செலுத்தல் அவசியம் என்பது அறிஞர்தம் கருத்து.

மாணவர், மாணவர் எனப் பேசப்படும்போது, கவலையற்ற அமர உலகிலே, அமர உலகின் நிர்மல வானிலே - எழில்பாடும் இன்பச் சிறகடித்துப் பறக்கும் வானம்பாடிகளைப்போல, களிபொங்கும் இளம் இதயங்கள்தான் நம் நினைவில் தோன்றுகின்றன. அந்த நினைவுத் தொடரின் ஊடே இருபதாம் நூற்ருண்டின் இயந்திர வாழ்வும் சலித்துப் போன நாட்களும் நினைவில் மிதத்தல் இயல்பே. என்ன இருந்தாலும் மாணவ வாழ்க்கையே தனிதான்! கட்டற்ற காளைபோல் புத்தூக்கம் பொங்கிப் பூரிப்படையும் உள்ளம் அந்த இளமைப் பருவத்தில் கண்ட இன்பக்கனவுகள் தான் எத்தனை?............ ....அன்றுபோல் என்றுமிருந்தால்? ....சிந்தனையோடு பெருமூச்சும் பீறிடுகிறது உள்ளத்தின் அடிவாரத்திலே. ஆனல் சில "ஆனல்" களும் சில "இருந்தால்" களும் மட்டும் நம் வாழ்வில் இல்லாமலிருந்தால் உலகமே சுவைப்பிழம்பாக இருக்கும் எனக் கூறலாம். உண்மையில் அவைகள் இருப்பதால்தான் உலகமே இனிய உணர்வூட்டும் சுவைப்பொருளாகத் திகழ்கிறது. இஃது உறுதி. இறந்த காலத்தைக் குறித்துக் கவலைப் படுவதினும் எதிர்கால வாழ்வுக்கான நல்ல திட்டங்களை வகுப்பதே போற்றற்குரியது என அறிஞர்கள் பகர்ந்திருக்கின்றனர். அத்தகைய அறிஞர் காட்டிய வழியில் நடக்கும்போது, நாம் மறுபடியும் மாணவராகமாறி உலகுக்குச் சாதிக்கப்போவதைப்பற்றி நினைப்பதைவிட்டு இன்றைய மாணவர் சமூகம் நாட்டின் நலப்பணிகளில் எவ்விதம் ஈடுபடவேண்டும் என்பதைப்பற்றிச் சிந்திப்பதே அறிவுடைமை என்ற எண்ணம் பிறக்கிறது.

மாணவர்களை விட்டு "சமூகம்" என்று வரும்போது இன்றைய சமுதாயத்தின் பரிதாப நிலை உள்ளத்தைத் தொடும் தன்மையாக இருக்கிறது. இந்த சமுதாயத்தையும் அது உற்பவித்த மக்கட் கூட்டத்தையுங் கண்டு பாரதியின் புரட்சியுள்ளம்-புதுமை விழைந்த உள்ளம "நெஞ்சு பொறுக்குதில்லையே" என உளம் வெதும்பிக் கண்ணீர் சிந்தியது. மனித வாழ்வே போராட்டக்களமாக மாறிவிட்டபோது சமூகம் கனல் பறக்கும் கொல்லனின் உலைக்களமாக மாறிவிட்டது. அறிஞர்தம் உழைப்பு வியர்வை வெள்ளமாகி விட்டது. உயிருக்கே ஊறுசெய்யும் பயங்கரச் சுழலாக சமூகம் மாறிவிட்டபின், முடிவைப்

பற்றி நினைக்கவும் நெஞ்சம் துடிக்கிறது. கால அலையின் வேறுபாடுகள், அதனால் உண்டான விளைவுகள், அல்லலுறும் ஆயிரக் கணக்கான மக்களின் இடைவிடாத ஏக்கக்குரல் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அல்லும் பகலும் அனவரதமும் அறிவாளிகளின் சிந்தனையைத் தூண்டிக்கொண்டிருக்கின்றது. சமூகப் புரட்சியாளர்களின் கிளர்ச்சிக்கு வலிவூட்டிக்கொண்டிருக்கின்றது. சமூகத்தின் இந்த அவலநிலைக்கு அடிப்படைக்காரணம் மனிதன்தான். அவனால் ஆக்கப்பட்ட சாதி, மதம் ஆகியவை அவனால் ஆளப்படுதலின்றி அவனையே ஆளத்தொடங்கிவிட்டன. காலப்போக்கு இவ்விதத் தலைகீழ் மாற்றங்களைக் கொணர்ந்த போதும் மனிதன் அவைகளைச் சீர்திருத்த மறந்துவிட்டான். அதன் முடிவு அவன் தலைக்கே கல் வந்துவிட்டது. சிறிய செடி இன்று காழ கொண்ட மரமாகிவிட்டது. எத்தனையோ சீர்திருத்த வாதிகள் தங்கள் காலமனைத்தையும் உழைப்பாக்கி, இரத்தத்தையே நீராக்கி உயிரையே வற்றவைத்து பாடுபட்டும் இந்த வலிய மரத்தின் எளிய கிளையைக்கூட அசைக்க முடியவில்லை. அம்மட்டுமா? சாதிப்பைசாசங்களும் மூடப்பழக்கமெனும் பேய்க்கூட்டங்களும் இம மரத்தைத் தம் உறைவிடமாக்கி மனிதனின் செயலற்ற நிலைகண்டு எள்ளி நகையாடுகின்றன. இந்தக் கோரக் களியாட்டங்கண்டு அறிஞர்களின் நெற்றியிலே சிந்தனைக்கீறல்கள்; புரட்சியாளரின் உள்ளத்தில் தேங்கிய நினைவுக் குமுறல்கள் !

இந்தச்சுழலிலே, மாணவர் குழாம் செய்யவேண்டுவதென்ன ? சாதிப்பிரச்சினை என்நிலையுற்றாலென்ன ? அறிவாளிகளைப்போல் ஏன் சிந்தனையைக் குழப்பிக்கொள்ள வேண்டும் ? 'நேரு' நேராய் ஆண்டாலென்ன ? கோணலாய் ஆண்டாலென்ன ? நமக்கு வேண்டியது கரையில் கல்விக்கடலின் ஒரு சிறிது தூரத்தைப் பொழுது போக்காகக் கடந்துவிட்டு வருதல்; கவலைக்கிடமின்றி களிபொங்கும் வாழவில் இன்பந்துய்த்தல் - அதற்குத்தான் சினிமா, சீட்டுக்கட்டு, சிநேகிதர் குழாம் இருக்கின்றதே ! எல்லாம் முடிந்தபிறகு எங்கேனும் முப்பது ரூபாய் வேலைக்கு முயற்சி செய்தல் என மாணவர்கள் தங்கள் வாழ்வுத் திட்டத்தை வகுத்துக் கொண்டால் — எதிர்கால இன்பத்திருநாட்டை உருவாக்குகிறவர்கள் தலையாய தொழிலை மறந்து விழலுக்கு நீராய் மாறினால்—வருங்காலச் சிற்பிகள் தேயத்தின் இன்றைநிலை மறந்து துன்பக்கடலின் சோர்வுத் தோணியாக மிதந்தால் நாட்டின் நிலை பிரகாசமில்லா ஆந்திராவாகிவிடும்; கதாநாயகியில்லா காவியமாகத்தான் முடிவுபெறும்; காதல் இல்லா இன்றைக் கல்யாணமாகவே முடியும் என்பதில் அறிவுத்திறன் காட்டும்வழி நடப்போர் எவருக்குமே ஐயந் தோன்றாது.

மாணவ உலக வாசிகள் இளம்பிராயத்தினர், பிஞ்சு உள்ளத்தினர், வளர்ச்சி விழையும் இத்தகைய இளைஞர் எங்ஙனம் பொதுநலப் பணியில் ஈடுபடவியலும ? மேலும் பொதுநலப்பணியென்று தெருக்களைச் சுத்தமாக்கி, சேரியை அழகுபடுத்தி, ஆவேசப் பேச்சுக்களை மேடையில் உதிர்த்துத்தள்ள மாணவரையா அறைகூவி யழைக்கவேண்டும்? கலைமகளின் கல்விக் கோவிலிலே வாழ்வின் முறை பயிலும் இளம் இதயங்களை சந்தைக் கடையில் நுழையும் மாக்கள் கூட்டமாகவா ஆக்குவது ? என்ற கடுமையான எதிர்ப்பும் எழலாம். கல்விச்சாலைகள் கலைமகளின் திருக்கோவில்தான். யார் மறுத்தது ? ஆனால் அப்புனித இடத்திலே கடவுளைக் கண்டு தொழுதல் மட்டும் மக்களின் குறிக்கோளாக அமையக்கூடாது. வரலாற்றின் ஏடுகள் திருப்பப்படும் போது, பண்டைக் கோயில்களின் உன்னதநிலை மனக்குழியில் அழியா ஓவியமாகப்படிகிறது. அக்காலக் கோவில்கள் கடவுளின் இருப்பிடமாக, கல்வியின் பிறபபிடமாக - அறிவு வளர்ச்சியின் ஆணிவேர் பதியும்

இடமாக — ஏன்! சுருங்கக் கூறின் அக்கால சமுதாயத்தின் உயிர்நாடியாகத் திகழ்ந்தன என்ற உண்மை புலப்படும். முந்தைய மக்களின் இன்ப வாழ்வைப் போற்றும் நாம் ஏன் அவர்கள் கடந்த பாதையிலேயே சென்று இன்றைய கலைக்கோவில்களையும் சமுதாயத்தின் உயிர்நாடியாக மாற்றக்கூடாது? நலம் பெற்ற மனிதனினும் நலங்கெட்ட உடலுக்கன்றோ வைத்தியன் தேவை? தாழ்வுற்ற இன்றைய இந்திய சமூகம் ஆறுதலுக்கேங்கி நிற்கின்றது. மாணவர்களின் இளம் புத்தூக்கப்படையே நொந்த சமுதாயத்தின் துயரக் கண்ணீரைத் துடைக்க முடியும்.

இந்து சமூகத்தில் இளம் விதவைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் ஏட்டில் வரையும் நிலைக்கு அப்பாற்பட்டது. இந்த நாட்டின் இன்பத்தைத் தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட எந்த ஒரு இளைஞனும் ஓர் இளம விதவையைக் கரம்பற்ற முன்வர வேண்டும். இந்த வேண்டுகோள் சுதந்திர பாரதத்தின் தந்தை அண்ணல் காந்தியாருடையது. விடுதலைப்போராட்டத்திலே அயர்ச்சியில்லாது ஒலித்த வெற்றிச் சங்கநாதத்தோடு கலந்து வந்த இந்த வேண்டுகோள் இன்னும் கற்றறிந்தோர் கைப் புத்தகத்திலே எதிரொலிக்கிறது. இளவயதிலே மணம்; உளம்பொருந்தா மணம் ஆகியவற்றைப் பொருத்தமற்றது என உதறித்தள்ளுவது; கைம்மை மணம், காதல் மணம் ஆகியவறறை ஆதரிப்பது போன்ற - காலத்துக்கேற்ற - கருத்துக்களை, மாணவர் குழாம் தங்கள் பொதுநலப்பணியின் சிறந்த லட்சியங்களாகக் கொளளலாம். இளம் உள்ளத்தில் தான் உணர்ச்சி யூற்று உரம்பெற்று எழும்பும். உதயத்தில்தான் எதுவும் இதயத்தில் பதியும். இஃது உலகறிந்த கூற்று. மாணவரிடத்தில் காணப்படும் சீரிய பேச்சுத்திறன் சிறந்த முறையில் செயல் படுத்தப்பட்டால் பொதுநலப்பணி யென்ற சொற்றொடரே அணிபெற்றுப் பொலியும் - தற்சமயம் கல்விக்கூடங்களிலே "கத்தரிக்காய் நல்லதா? கருப்பட்டி நல்லதா" என விவாதம் புரிவதிலும், இலக்கியம் ஒழிய வேண்டும் எனப் பேசுவதிலும் வீண் விரயமாக்கப்படும் இந்த மாபெரும் சக்தி, நல்லமுறையிலே பயன்படுத்தப்பட்டால் - சாதி மதத்திலிருந்து சனாதனக் கொள்கைகள் என்ற பருத்தகிளை நிரந்தரமாக அகற்றப்பட்டுவிடும்.

அரசியலில் ஊழல் மலிந்துவிட்டது. எங்கும் பணம் பேசுகிறது என்ற பேச்சு அதிகமாகிவிட்டது. இந்த சீர்கெட்ட நிலையிலே மாணவர்கள் அரசியிலிலே குதித்து குழப்பத்தை நீக்கி அமைதியை நிலைநாட்டவேண்டுமென்ற கூற்று அரசியல் தெரிந்தவர்களின் மனநிலைக்கு ஒவ்வாது. அறிஞர்கள் வெறுக்கும் இந்தக்கொள்கை மாணவ உலகின் கவனத்தைக் கவர்ந்து வருவது கவலைப்படற்குரியதே. அரசியல்வாதியாக மாறித்தான் தெளிவு காணவேண்டுமா? அரசியலை உருவாக்கும் அமைச்சர்களைத் தெரிந்தெடுக்கும் மக்களின் மனப்பாஙகைப் பணபடுத்தி நல்ல பலன் காணலாகாதா என்பதுதான் இன்றைய கேள்வி. தேர்தல் சூதாட்டக்களமாக மாறிவிட்டது. கல்வியறிவற்ற மக்கள் கண்டவருக்கு வாக்களித்ததன் பயன்தான் இந்தச் சீர்கேட்டின் வித்து என உணர்ந்துவிட்டோம். உணர்வின் பயன் செயலுக்கடிப்படையாக அமையவேண்டும். அஃதே சிறப்பு. அனைத்துக்கும் அரசியலமைப்பையே சுட்டாது, நாமும் சூழ்நிலைக்கேற்ப தொண்டு புரிதல்வேண்டும். தான் பெறற கல்வியின்பத்தை மற்றவருக்கும பகிர்ந்தளித்தல் மாணவருக்கு நலமும் இன்பமும் பயக்கும செயலாகும்.

இவ்விதமே எண்ணும்போது மனநலம்படைத்த மாணவ உலக வாசிகளால் போரால் மடியும் இன்றைய உலகைப் புனரமைப்புச் செய்யமுடியும்; வளைந்த உள்ளங்களைச் சீர்திருத்தமுடியும் என்ற எண்ணம் வலுப்படுகிறது. ஆக்கம் நாடும் உள்ளங்கள் ஊக்கங் கொண்டால் எதையுமே எளிதில் சாதித்துவிடலாம். மாணவர்களின் உற்சாகம் கிளர்ச்சியூட்டப்பெற்றால்-உணர்ச்சி தட்டி யெழுப்பப்பட்டால் - பொதுநலப்பணி யென்ன? புதுநலப் பணிகளும் முடிவை யெய்தி நலம்பெற முடிந்து நம் நாடே நானிலத்தின் வழிகாட்டியாக விளங்கலாம். எழுத்தறிவிக்கும் இறைவன் தொழிலையே மாணவர் குழு பெரும் பொது நலப்பணியாக ஏற்று நடத்தினால் வருஙகாலத்தில் இந்திய நாடே இனபபுரியாக எழில் பெற்றுவிடும்; துயரமறற அந்த அமர உலகிலே மக்களனைவரும் மாணவ உலகவாசிகளைப்போல இன்பச் சிறகடித்து விடுதலைக் கீதமிசைத்து நீலவானிலே நாளும் உலவி வரலாம்.

விரைந்து வருக அந்த நாட்கள்!

நல் முத்துக்கள்

N. V. Saroja, I U. C.

உனக்கு ஒரு தாய் இருந்தால் அவளைப் போற்றி வாழ்! இன்றேல் தாயை இழந்து திக்கற்றுத் தெருவில் நிற்கும் பிள்ளைகளைப் பார்த்தேனும் திருந்து!

உனக்கென்று ஒரு மொழி இருந்தால் அதனை வளர்த்து வாழ்! இன்றேல் தன் மொழியை இறந்து படச் செய்து பிற மொழி கலந்து உளறிப் பேசி வாழும் மக்களைப் பார்த்தேனும் திருந்து!

உனக்கென்று ஒரு நாடு இருந்தால் அந்நாட்டைக் காப்பாற்றி வாழ்! இன்றேல் நாடற்று நாடோடிகளாய்த் திரியும் மக்களைப் பார்த்தேனும் திருந்து!

மடியவுந்துணியும் பெண் மனம்; ஆனால் மரியாதையை மட்டும் இழக்காது.

பொற்கொல்லன் பொன்னில் உள்ள களிம்பைப் போக்குவது போல் அறிவொளி கணந்தோறும் சிறிது சிறிதாகத் தம்முடைய மாசு களைப் போக்குகிறது. — புத்தர்.

மனிதன் இரக்கமுள்ளவன்; ஆனால் மக்கள் கொடுமையானவர்கள் — ரவீந்திரர்.

உலகம் பெண்களுக்குக் கவலையை ஆக்கத் தெரிந்துகொண்டது; ஆனால் போக்கத் தெரிந்துகொள்ளவில்லை — டாக்டர் மு. வரதராசன்.

தொகுத்தவர் — 'செல்வி'

வாழ்வின் உயிர்

அன்புள்ள நண்பா !   செல்வி, I. U. C.

உன் கடிதம் கிடைத்தது. உன்னுடைய எதிர்காலத்தின் இன்பக் கோட்டையை எதிர்நோக்கும் எனக்கு உன் வினு திகைப்பை விளைவித்தது. கல்லூரிப் படிப்பை முடித்து விட்டேன். இனி என்ன செய்ய ? என்று கேட்டிருக்கிறுய் ! உன்னைப் போன்ற படித்துப் பட்டம் பெற்ற பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் கேட்க வேண்டிய கேள்வி இது !

நீ இதுவரை நடந்தவற்றை ஏட்டில் வரைந்த எழுத்தோவியங்களைத்தான் படித்து வந்திருக்கிறுய். இனிப்படிக்கப் போவதுதான் உண்மையான படிப்பு! உணர்ச்சியின் உண்மைநிலை! ஊக்கத்தின் பயன்! உழைப்பின் உறுதி ! நான் சொல்வதைக் கவனமாகக் கேள்.

" புத்தகங்களிலுள்ள தத்துவ ஞானத்தைக் கரைத்துக் குடித்த பிறகும் மனிதன் தவறுகள் செய்கிறுன். அறிவுப் பொக்கிஷத்தை முழுவதும் சேமித்த பிறகும் அவன் தன் அறியாமையை வெளிப்படுத்துகிறுன். இதற்கெல்லாம் காரணம் ஒன்றே ஒன்று தான். ஒரே ஒரு புத்தகம் படிக்க அவன் அடியோடு மறந்து விடுகிறுன். அந்தப் புத்தகத்தின் பெயர் தான் **வாழ்க்கை** என்பது. தனி மனிதனின் வாழ்க்கையல்ல, சமூக வாழ்க்கையல்ல மனித வாழ்க்கை ! எண்ணற்ற மக்களின் இருதயத்தில் எழுதிய புத்தகம் அது ! இதிலே சில பக்கங்கள் கிழிந்திருக்கும். சில பக்கங்கள் தொலைந்து போயிருக்கும்; சில முன்னும் பின்னுமாக இருக்கும்; சில இடங்களில் நாலைந்து தடவை மூல வாக்கியம் அடிபட்டிருக்கும். ஆதலால் உண்மை எது? பொய் எது? என்ற குழப்பம் மனத்திலே தோன்றும். இந்தப் புத்தகத்திலே மலர்களைவிட முட்களே அதிகம். ஆனுல் சிலைக்கும் உயிருள்ள மனிதனுக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் மற்றப் புத்தகங்களுக்கும் இந்தப் புத்தகத் திற்கும் ! ஆதலால் நான் உன்னிடம் சொல்வது முதலில் கண்ணைத் திறந்து இந்த வாழ்க்கை நூலைப் படி. ஆனுல் இதைப் படிக்க நீ வீட்டை விட்டு வெளியே போகவேண்டியிருக்கும். வீட்டில் சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு இந்நூலைப் படிக்க ஆரம்பித்தால் புத்தகம் முழுவதும் வெற்றுத் தாளாகத்தான் தென்படும். ஆகவே நீ முதலில் இதைப் படிக்க வெளி உலகத்தை-உன்னைச் சுற்றிலுமுள்ள உலகத்தை நோக்கு !.

அதிலே காண்பாய் ! எண்ணற்ற மக்கள் படும் அவதியை, உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி, இருக்க இடமின்றி, ஒருசில பணமுதலாளிகளால் கடும் தொல்லைகளுக் குள்ளாகி, அறியாமை, திருட்டு, பொய், வஞ்சம், கொலை முதலியவைகள் கோர தாண்டவ மாடுவதைக் காண்கின்றுய் ! எங்கு நோக்கினும் இல்லை எனும் சொல் எட்டெட்டுத் திக்கிலும் கேட்கின்றது. இதை நீக்க வழி இல்லையா என்று இத்தனை நாள் ஆராய்ந்தனையா ? உன்னை ஆக்கப் படைத்து ஆளாக்கிய அறிவற்ற உலகத்தைச் சிந்தித்துப் பார்த்தாயா ? இல்லை சிர்தூக்கித்தான் பார்த்தாயா ? யோசித்துப்பார்.

ஆம், உன் துடிப்பு என் செவிக்கு எட்டுகின்றது. நோயாளியான குழந்தையைக் கண்டு தாயின் மனம் என்னதான் துடித்தாலும்; அந்தக் குழந்தையைக் குணப்படுத்தும் சக்தி வைத்தியனின் அறிவுக்குத்தான் இருக்கிறது; அதுபோல இன்றைய உன்போன்ற இளைஞர்கள் துடிப்புக்கு ஏற்றபடி செயல் திறமையும் சேர்த்தால் தான் உங்களை வளர்த்த நாட்டுக்கும் மொழிக்கும் இனத்துக்கும் சீரிய தொண்டு செய்வதாகும். உங்கள் வருங்கால சந்ததிகள் தலைநிமிர்ந்து மகிழ்வுடன் வாழ்வை நடத்த வழிகாண முடியும். அதற்கு வழிகாண நீங்கள் வழிவகுத்துத்தான் தீரவேண்டும். அதற்கு உன் வாழ்க்கையின் வெற்றி போராடுவதில் தான் இருக்கிறது.

முதலில் புது உலக சமுதாயத்தை நாம் உண்டாக்க வேண்டும். இந்தச் சமுதாயத்திலே நாம் பசியைத் தணிப்பதற்கு உணவை அளிப்போம். உடுக்க உடையைத் தருவோம் இருக்க இடத்தைக் காட்டுவோம். இதற்காக நீங்கள் போராடவேண்டும்! யாரோடு போராடுவது என்று கேட்கின்றாயா? உங்களோடு சமமாகப் பாடுபடும் தோழர்களோடு அல்ல; அறியாமை, பேராசை, நோய், கொடுமை, பிற்போக்கு ஆகியவற்றை எதிர்த்துப் போராடவேண்டும்; தூங்கினது போதும்-இன்று முதலாவது விழித்திருந்து வினைதீர்க்க முற்படு.

அவர்களின் வாழ்க்கை பயன்பட வேண்டுமானால் அறிவினைக் காட்டிலும் உணர்ச்சி மிகுதியாக வளர வேண்டும். தனி மனிதன் உல்லாசமாக வாழ்வதை விட சமூகத்தை அமைப்பவர் என்ற முறையில் 'வீரனாகச் சாவது நல்லது' என்றசிந்தனையை-உயிரற்ற புத்தகங்களிலே புதைந்துபோன - இளம் உள்ளத்தில் புகுத்த வேண்டும்! அதுதான் நீங்கள் முதலில் புரிய வேண்டிய பணி.

மனம் ஒரு விசித்திரமான கருவி. அது எப்படி வேலைசெய்கிறது? எதனால் வேலை செய்கிறது? என்று இதுவரை எந்த விஞ்ஞானியும் கண்டு பிடித்துச் சொன்னதில்லை. ஏடுகளில் அந்தக் கருவியைக் கட்டுப்படுத்த முடியாது. மனத்தின் போக்கு யாருக்கும் புரியாத ஒரு புதிர்; ஆனால் அந்தக் கருவியை துவேஷம், வெறுப்பு, வஞ்சகம் முதலிய தூசு படியாமல் வைத்திருக்கப் பழக வேண்டும். அத்தகைய மனத்தைக்கொண்டு நீ இன்று முதல் செயலாற்றப் புக வேண்டும்.

செயலாற்றப் புக உன் மனம் செல்கிறது. ஆனால் அறிவு பிறர் தாக்குதலுக்கு ஆளாக நேரிட்டால் என்ன செய்வது என்று கலங்குகிறதல்லவா? இருளுக்குப் பின் பகலும், புயலுக்குப் பின் அமைதியும் வருவது போல் நாலு அயோக்கியர்களும், அதை நம்புகிற வம்பர்களும் சேர்ந்தது தானா உலகம்? எண்ணிப்பார்! எண்ணியதை ஆராய்ந்து பார்! சிந்தனை செய்! சிந்தித்ததை சீர் தூக்கிப்பார்! இந்தப் பரந்த உலகம் நல்லவர்கள், கெட்டவர்கள், வஞ்சகர்கள், சூர்ம சீலர்கள் எல்லாம் கொண்டதல்லவா? எந்த விஷயத்திற்கும் இரண்டு கட்சிகள் உண்டு என்பதை ஒப்புக்கொள்ளும் நியாயவான்கள் உலகில் இல்லை என்று நினைக்கிறாயோ? குற்றச்சாட்டு அபவாதம் எத்தனை நாளைக்குத்தான் உண்மையை மறைத்து வைக்க முடியும்? ஆகவே திகைப்பைக் கைவிடு. திண்டாட்டத்தை திண்றவிடு. சீர்திருத்தத்தை ஆரம்பி.

இன்றைய உலகில் அறிவும் உணர்ச்சியும் அநியாயத்தை எதிர்க்கின்றன. ஆனால் அறிவு சொல்லளவில் தான் எதிர்க்கிறது. இன்று அறிவு சாபச் சொல்லைக் கூறிக்கொண்டு சும்மா நிற்கிறது. உணர்ச்சி என்ன செய்கிறது என்பது தெரியுமா? அது செயலற்று நிற்கவில்லை யாயினும் அது பெருமூச்சும் கண்ணீரும் அடித்தாலும் அநியாயத்துக்குப் பலியாக உயிரைக் கொடுத்தாலும் முடிவில் எதிர்ப்பைத் தாக்கி வெற்றி கொள்ளத்தான் செய்கிறது. இந்த உணர்ச்சியை வளர்த்து செயலாற்றத் தொடங்குங்காலத்தை எண்ணி சீர்திருத்தத்தைச் சிறந்ததாக முடி.

முதலில் சமுதாயத்திலுள்ள புன்மைகளும் புரட்டுகளும் பீடைகளும் இல்லாமல் ஒழிக்க முற்படு. அப்பொழுதுதான் நிச்சயமாக நல்லதொரு சமுதாயம் ஏற்பட முடியும். அத்தகையதொரு சமுதாயம் ஏற்பட நம் சமுதாய முற்போக்குக்கு முட்டுக் கட்டைகளாக நிற்கும் வைதீகத்தையும் முதலாளித்துவத்தையும் தகர்த்தெறிய முதலில் முற்பட வேண்டும். இப்பெருங் காரியத்தைச் செய்வதில் உன்போன்ற இளைஞர்கள் இன, மத வேறுபாடின்றி எல்லோரும் 'ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்' என்ற நிறைவுடன் 'எல்லோரும் இந் நாட்டு மன்னர்' என்ற பாரதியின் சீரிய வாக்கைக் கொண்டு செயலாற்றுங்கள்.

அதற்கு முக்கியமாக உங்களின் எண்ணங்களும் செயல்களும் ஒரே விதமாக அமையவேண்டும். அதற்கு சமூக உணர்ச்சி மிக்க அவசியம். அந்த சமூக உணர்ச்சி என்பது முன்னேறும் வாழ்க்கையின் உயிர். இந்த உணர்ச்சி எப்போதும் மூன்று வகையாக வெளிப்படும். அதாவது சொல், செயல், கண்ணீர் என்பன. காவியம் என்பது இந்த உணர்ச்சியின் அழகான முதல் வடிவம். ஆனால் காவியச் சொற்கள் எவ்வளவு அழகாக இருந்தாலும் கடைசியில் காற்றோடு மறைந்து விடும். கண்ணீர் என்பது உணர்ச்சியின் மற்றோர் அழகிய வடிவம். ஆனால் மனிதனுடைய கலங்கிய உள்ளக் கடலிலிருந்து வெளிவரும் இந்த முத்துக்கள் கடைசியில் துளி மதிப்பும் பெறாமலே மண்ணாகின்றன. சுற்றுப்புறத்துக்கு துன்பங்களைக் கண்டு கலங்கும் மனிதனுடைய மனத்தை ஓரளவு லேசாக்குவதைத் தவிர, சொல்லும், கண்ணீரும் வேறு ஒன்றும் செய்துவிட முடியாது.

இந்த உணர்ச்சியின் மூன்றாவது வடிவந்தான் மனிதனுடைய முன்னேற்றத்துக்கு உதவ முடியும். இந்த வடிவம் வாயினாலோ, கண்ணினாலோ பேசாது. அது எப்போதும் கையினால் தான் பேசும். தன் இரத்தத்தைப் பாய்ச்சிப் பிறருடைய வாழ்க்கையை அது மலர வைக்கும். சொல், கண்ணீர், இரத்தம் மூன்றும் பிறக்கும் இடம் ஒன்று தான். ஆனால் அவற்றின் உலகங்கள் மாறுபட்டிருக்கின்றன. இத்தகையவைகளை உன் வாழ்க்கையில் கடைப்பிடித்து தொண்டு புரி. நம்முடைய இன்றையப் பகுத்தறிவு வாதம் என்பது துன்பப் படாமல் வாழ்வதற்கு ஒரு ராஜபாட்டை. தம்மை அறிவு வாதிகள் என்று சொல்லிக்கொள்ளும் கூட்டத்தில் காந்தியடிகள் அக்கூட்டத்தோடு எப்போதும் ஒட்டாமல் இருந்ததற்குக் காரணம் இதுதான். காந்தியின் தத்துவத்தில் இன்பப் பேச்சுக்கு இடமில்லை.

இத்தகைய தத்துவத்தை உன் வாழ்வில் கடைப்பிடி. உன்னைத் திருத்தி, உன்னைச் சுற்றிலுமுள்ளவர்களைத் திருத்து. அவர்களின் இன்னலைக்கண்டு இன்னலுற்று, அதனை நீக்கும் வழியைத் தேட வகை புரி. தாய் மொழியைப் பாதுகாத்துக்கொள். பிற மொழிகள் உன்

மொழியில் கலப்பதைத் தடுக்காதே; ஆனல் உன் மொழி தேய்வடையாமல் இருப்பதற்குத் துணை செய். அத்தகைய துணைக்கு, மொழியின் வளர்ச்சிக்கு எண்ணற்ற இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து, ஆக்க வேலையில் ஈடுபடச் செய்து, எண்ணற்ற இலக்கியங்களை எழிலுடன் வெளிக் கிளம்பச்செய்து, 'தன் நிகரிலா தனித் தலைமைத் தமிழ் மொழி' பாரெங்கும் புகழுடன் விளக்கம்பெற பணி புரி. ஆனலும் புதியனவற்றில் மகிழும் குழந்தையின் உள்ளத்தைப் போல் அல்லாது, பழையனவற்றில் புதுமை கண்டு, பழமையை வளர்த்து அதே சமயத்தில் புதியனவற்றை பாதுகாத்து புத்துலகத்தை உண்டாக்கு !

உனது இன்பமெனும் மொழி வளர்த்த இன்னுயிரான தமிழ் நாட்டையும் மறந்து விடாதே ! மறந்து மாண்பு மிக்க தொரு செயலைச் செய்யாது மங்கி மடியாதே ! இன்று உன் உள்ளத்தில் கொண்ட ஓர் எழுச்சி உன் உயர்வுக்கு வழிகோலப்படும் ஊக்கத்துக்கு வழிகோலும். இன்று கொண்டுள்ள உன் சபதம், உன் உயிர் உள்ளவரை உடலில், உள்ளத்தில், உலகத்தில், நின்று நிலவட்டும். அதுதான் பலன் கருதாப் புகழை உனக்கு அளிக்கும். உனது **உளம்** எனும் நிலத்தில் **தொண்டு** எனும் பயிர் வளர்ச்சியுற அதற்கு உன் சொல் எனும் கெடும் பூச்சி நீக்கி, கண்ணீர் என்னும் களைகளைக் களைந்து செயல் என்னும் நன்னீர் பாய்ச்சு. அப்போதுதான் உனக்கு, நீ அனுபவித்த துன்பங்களுக்கு ஈடாக மகிழ்வு பெற்று **புகழ்** என்னும் கனியை எய்தமுடியும்.

நீ கொண்டுள்ள சபதம் யாது என சிந்தி? "வானமளாவியக் குன்றுகளும் மலைகளும் தனக்கொரு வலிமை மிக்க கோட்டையாக வாய்க்கப் பெற்ற வளநாடே ! நீ எனது வாழ்வு ! மேகங்கள் குமுறி முத்துநீர் சொரிய மா, பலா, வாழை யெனும் முக்கனிச் சோலைகள் மகர தோரணங்களோ வென வியப்புறக் காட்சி தரும் மங்களத் தாய்நாடே ! நீ எனது தன்மானம். உயிர் நதிகளும் கிளை நதிகளும் உற்ற பல சுனைகளும் ஊடுருவிச் செல்ல உயர்ந்த பல பொன்னிறச் செந்நெற் கதிர்கள் ஓங்கி வளர்ந்த உத்தமத் தாய் நாடே ! நீ எனது உடல்; என் குருதி. எல்லாம் தாய் நாட்டில் ஆறுகப் பெருக்கெடுத்து எழும்படி செய்வேன். மறவேந்தர் வழி வந்த நாட்டின் பெரியோர்கள்; அவர்கள் வாழ்ந்த மங்காச் சிறப்பைக்குன்றின் மேல் இட்ட விளக்குப்போல ஒளிரச் செய்வேன். என் உடலினின்று உயிர் போகுமட்டும் என் தாய் நாட்டின் திருப்பணியைப் போற்றி, இறுதியில் வீர சுவர்க்கம் புகுவேன். இதுதான் நமது சபதம்.

நண்பா! கடிதம் நீள்கிறது. கடிதமெனும் ஓடையில் சில சில குறைகள் என்னும் கற்களைக் காணலாம் ! கருத்து வேறுபாடு என்ற தீமைசெய்யும் முதலைகளைக் காணலாம். ஆனலும் உன் படகை, அறிவுடன், மன மகிழ்வுடன், ஊக்கத்துடன், உறுதியுடன் செலுத்து. முடிவில் வெற்றி எனும் கரையை விரைவில் அடைவாய் ! உன் போன்ற நண்பர்கள் கிடைத்ததைப்போல உங்களால் நம் தாய் நாடு குறைகள் அற்று, நிறைகள் மிகுந்து காட்சி தருமானல் புகழ் எவ்வளவு அதிகரிக்கும்? அந்த நாள் என்று வரும்? அதுதான் நம் இன்ப நாள் ! தமிழனின் தலை சிறந்த நாள் ! மனதின் மகிழ்வு தரும் மாண்பு மிக்கநாள் ! நண்பா, அந்நாள் விரைவில் வர இயற்கையன்னையை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்
உன் நலமே நாடும்
'திணகரன்'

கல்வியின் மாண்பு

By கோ. வெ. கோவிந்தசாமி நாயுடு

நமது நாடு சிறந்த ஒழுக்கத்திலும் கல்வியிலும் மேம்பட்டது என்பதனை இந்திய இலக்கிய இலக்கணங்களை உணர்ந்தவர்கள் எவரும் மறுக்க மாட்டார்கள்.

இக்காலத்தில் போக்கு வரவு வசதிகளால் பல நாட்டு மக்களும் நெருங்கிப் பழகு தற்குரிய வாய்ப்பினால் அவர்தம் பண்பாடுகளுள் சிறந்தவற்றை நாமும் மேற்கொண்டு கடைப்பிடிக்கிறோம். எனினும், எதிர்காலத்தில் நாட்டின் மன்னர்களாக விளங்கப்போகும் இன்றைய சிறுவர்கள் – இந்தியத் தாயின் தவப்புதல்வர்கள் – கல்வியிலும் செல்வத்திலும் சுகாதார முறைகளிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்டவர்களாக விளங்குதற்கு நாம் பெரு முயற்சி எடுக்க வேண்டும். இன்று எல்லாவற்றிற்கும் அரசியலாரை எதிர்பார்ப்பது போல இராது அரசியலாருடன் பொது மக்களும் ஒத்துழைத்து வெற்றி காணவேண்டும்.

நம் நாடு கிராமங்கள் நிறைந்த ஒரு பெரும் நாடு. மக்களில் பலரும் கிராமங் களிலேதான் வாழ்கின்றனர். அத்தகைய மக்கள் கல்வி வசதியின்றி போக்கு வரவு முறை சரியின்றி, பொருளாதாரம் என்பது பற்றி சிறிதும் உணர்வின்றி, சுகாதாரம் என்பதன் வாசனையே அறியாமல் வாழ்கின்றதைக் கண்கூடாகக் காண்கின்றோம். நூற்றுக்கு எண்பது பங்குள்ள இப்பகுதி நைந்து நலியும் பொழுது நாட்டின் முன்னேற்றம் எங்கிருந்து வரும்? அக்காலத்தில் கிராமத்தில் வாழ்ந்த மக்கள் நூல் நூற்றார்கள்; நெசவு நெய்தார்கள்; தம் வயல்களிலே தானியங்களையும் காய்கறிகளையும் விளைவித்தார்கள்; மாடுகளையும் கோழிகளையும் தமக்குத் துணையாகக்கொண்டு பொருளீட்டினார்கள். அதே மக்கள் இன்று கிராமங்களை சோம்பேறி மடங்களாக்கி உணவுக்கும் உடைக்கும் வேறொருவரை எதிர்பார்த்து நின்று கடவுள், அறம் என்ற நினைவே இல்லாதவர்களாக, கல்வி வாடை என்பதையே அறியாமல் வாழ்கிறார்கள்.

இன்றைய அரசியலார் விழிப்பெய்தி நாட்டு மக்களின் நலிவினை நீக்கி ஆவன செய்ய ஏற்பாடு செய்கின்றார்கள். அவர்களுடன் பொதுமக்களும் உடன்சேர்ந்து உழைத்து நாட்டுமக்கள் ஒவ்வொருவரையும் நற்குணமும் நற்செய்கையும் வாய்ந்தவர்களாய் ஆக்க முற்படவேண்டும்.

மனிதப் பிறவியின் பயன் ஆத்மலாபம் பெறுதலே என்பதனை நம் தமிழ் நூல் களனைத்தும் வலியுறுத்துகின்றன என்பதனை நீதி நூல் வல்லுநர்கள் எவரும் அறிவர்.

இவ்வண்ணம் நோக்குங்கால் ஆண்பாலார், பெண்பாலார் என்ற இருவரும் ஐம்புல நுகர்ச்சியிலும், ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதிலும், கல்விகேள்விகளிலும் உலகநடப்பு முதலியவற்றை உணர்வதிலும் ஒத்த இயல்பு பொருந்தியவர்கள் - சமமானவர்கள் - வேறுபாடு அற்றவர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

இடைக்காலத்தில் நமது நாட்டிலே நேர்ந்த பல தொல்லைகளால் நம் பெண்ணினத்திற்குக்கல்வி, செல்வம் முதலான நிலைகளில் குறைபாடு நேர்ந்தது. அவர்களுடைய முன்னேற்றம் சார்ந்தவர்களுடைய தயையைப் பொருத்ததாகவும் அமைந்திருந்தது. பெண்கள் அரசியலார்க்குத் தம்முடைய குறைகளைத் தெரிவித்து, தாமும் தமது சொந்த முயற்சியினால் உழைப்பையும் மேற்கொண்டு, தம்முடைய பெற்றோர்க்கும் உடன் பிறந்தோர்க்கும் தம் உரிமையினையும் அன்புடன் எடுத்துக்கூற வேண்டும். அவ்வாறு கூறினால்தான் தம் பிற்கால வாழ்விலே பிறந்த வீட்டிலும் மணம்முடிந்து புகுந்த வீட்டிலும் தன்னுடைய துன்பங்களைக் களைந்து இன்ப வாழ்வு வாழ வழி வகுத்துக்கொள்ள முடியும்.

ஆகையால் சிறு வயதினராயிருக்கின்ற காலத்திலேயே நன்றாகக் கல்வி கற்க வேண்டும். உயர்ந்த பண்புகளை மேற்கொள்ள வெண்டும். கற்றதன் வழிநின்று பொருளீட்ட வேண்டும். ஈட்டிய பொருளை, நான்கில் ஒரு பகுதி அறத்துக்கென ஒதுக்கியும், ஒரு பகுதி தன்னுடைய பின்னோர்க்கும், ஒரு பகுதி தன் ஆற்றல் குறைந்த பிற்கால வாழ்க்கைக்கும், மற்ற ஒரு பகுதி தன் குடும்பத்திற்கும் ஆகும் வண்ணமாகப் பகுத்துத் 'தன்கை தனக்குதவி' யென பிறரின்மேல் சாராது தன் உடல் உழைப்பினாலே வாழ்வதே சாலச்சிறந்த வழி. ஒழுக்கத்தில் சிறந்து பெண்களின் அணிகலமாம் கற்பு என்பதனை உயிரினும் சிறந்த பொருளாகப் பேணி ஆண்மக்களுடன் தாமும் உடன் முயன்று நம் தாய்நாட்டைப் பொன்னாடாக்குவதே கல்வியின் மாண்பு.



செந்தமிழ் மன்றம்

ஆண்டு அறிக்கை 1953—54.

" கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல் "

இது தமிழ்மறை கண்ட தத்துவ ஞானியின் சொல். உலக நாகரிக வளர்ச்சிக்கு விஞ்ஞானத்தினடிப்படையில் எண்ணற்ற காரணங்கள் கூறப்படினும் அவற்றை மக்கள் உள்ளம் உணரும் வண்ணம் எடுத்துக்கூற 'சொல் வன்மை' தேவைப் படுகிறது. கல்வி கற்றும் கருத்தை விளக்க முடியாதான் "இணரூழ்த்தும் நாறா மலரனையன்" என்பது வள்ளுவர் வாய்மொழி. அத்தகைய குறைபாட்டினின்றும் மனிதனை விலக்கவும், காலத்தைக் கருத்தோவியமாக்கும் எதிர்காலச் சிற்பிகளாம் மாணவர்களின் திறமையைச் செவ்வைப் படுத்தவும், பள்ளிகளிலிருந்து பல்கலைக் கழகம் வரை மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. எங்கள் மன்றமும் மாணவர் குழுவுக்கு இவ்வகையில் சீரிய பணியாற்றி வருகிறது என்பதனை பெருமிதம் தோன்ற அறிவிக்கிறோம்.

இந்த ஆண்டின் அலுவலர்கள்.

தலைவர் :— திருமதி **P.** ஆதிசேஷையா, M. A., L. T.,

துணைத் தலைவர் :— திருமதி **K.** சிவானந்தவல்லி, B. A, (Hons)

செயலாளர் :— குமாரி **U. V.** சரோஜா, முதல் வகுப்பு.

மன்றத்தின் நிகழ்ச்சிகள்.

9—8—53 ம் நாள் இம்மன்றத்தின் துவக்க விழாக் கூட்டம் கல்லூரிக் காப்பாளர் உயர்திரு G. V. கோவிந்தசாமி நாயுடு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கோவை அரசினர் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் உயர்திரு K. S மகாதேவன் M. A., B. SC., அவர்கள் தமிழனின் பழமை என்பதனின் அடிப்படையில் அகம் புறம் என்னும் வாழ்க்கையின் இரு கூறுகளையும், அவை மக்களை உலகம் என்னும் பொது மேடைக்கு எவ்வாறு ஈர்த்துச் செல்லுகிறது என்பதையும் சுருக்கமாக சுவைததும்பும் முறையில் பேசினார். இதைத் தொடர்ந்து குமாரி பிச்சம்மாவின் இசை நிகழ்ச்சியும், மாணவியரால் 'புரட்சிக்கவி' என்ற நாடகமும் நிகழ்த்தப்பெற்றன.

எமது இரண்டாவது கூட்டம் கல்லூரிக் காப்பாளர் உயர்திரு G. V. கோவிந்தசாமி நாயுடு அவர்களின் அறுபத்தேழாவது ஆண்டு நிறைவு விழாவாக அமையும் பெற்றியினைப் பெற்றது. அது திரு. P. S. G. வெங்கிடசாமி நாயுடு அவர்களின் தலைமையில் கொண்டாடப் பெற்றது. திருமதி கிருஷ்ணவேணி நாராயணன் B. SC., (HONS) அவர்கள் கல்லூரிக் காப்பாளருக்கு வாழ்த்து மடல் ஒன்றை நல்கினார்கள். கோவை P. S. G. குடும்பத்தினரும் அவர்தம் சார்பில் ஒரு வாழ்த்து மடலை நல்கினார்கள். விரிவுரையாளர்களின் சார்பில் திருமதி K. சிவானந்தவல்லி B. A., (HONS) அவர்களும் மாணவியர் சார்பில் குமாரி மைதிலியும், குமாரி P. K. ராஜலக்ஷமியும், நகரத்தார் சார்பிலே உயர்திரு இராமராவ் B. A., B. L., அவர்களும் ஆலைத்தொழிலாளர்கள் சார்பில் திரு. மெய்யப்ப செட்டியார்

அவர்களும், இன்னும் பல நண்பர்களும் காப்பாளரின் உயரிய பண்புகளையும், சீரிய செயல்களையும் பாராட்டிப் பேசியதோடு கல்லூரி வாழவேண்டும் என்னும் வாழ்த்துரைகளையும் வாரி வழங்கினர்கள். கல்லூரி மாணவியர்கள் காப்பாளரின் வரலாறு அடங்கிய வில்லுப் பாட்டினை பாராட்டத்தக்க முறையில் இசைத்தனர். பின்னர் காப்பாளர் இவற்றிற் கெல்லாம், நன்றி கூறுமுகத்தான் பேசுங்கால் "தன் உணர்வு உள்ளவரை உலகுக் குழைப்பேன்" என உறுதி கூறினர்.

12–9–53ம்நாள் முதல் வகுப்புமாணவி சு. ரெஜினு தலைமையில் 'கடமையும் உரிமையும்' என்னும் பொருள்பற்றி சி. சாரதா, இரா. இராஜலட்சுமி, த. இந்திரா, இரா. சரோஜா முதலியோர் பேசினர்கள். கடமை, உரிமை இரண்டும் வாழ்வின் இருகண்கள் எனவும் கடமை உரிமையின் அடிப்படையிலே முகிழ்க்கிறது எனவும் எடுத்து இயம்பினர்கள்.

இம்மன்றத்தின் நான்காவது கூட்டம் முதல் வகுப்பு மாணவி குமாரி P. K. இராசலக்குமியின் தலைமையில் 'நம் நாட்டிற்கு இந்தி பொதுமொழியாவது தகும்' என்பது பற்றி மாணவியர் விவாதித்தனர். இதனை குமாரி மைதிலியும், குமாரி சுலோச்சனவும் எடுத்து மொழிய குமாரி திலகவதியும், கேத்தரினும் தடுத்து மொழிந்தனர். பின்பு பலர் எடுத்தும் தடுத்தும் மொழிந்தனர். பெரும்பான்மையான வாக்குகளால் பொருள் தோல்வியுற்றது.

இம்மன்ற ஐந்தாவது கூட்டத்தின் விவாதத்துக்கு உரிய பொருளாக "புதிய கல்வித் திட்டம் நாட்டுக்கு நன்மை பயக்கும்" என்பது அமைந்தது. எடுத்து மொழிந்தோர், அதிகமான மாணவர்கள் கற்க முடிகிறது என்பதோடு எட்டுக் கல்வியோடு தொழிற் கல்வியும் பயிற்றுவிக்கப் படுகிறது என ஒட்டி விளக்கினர்கள். தடுத்து மொழிந்தோர் ஆசிரியர்களின் மீது இரட்டிப்பு வேலை சுமத்தப்படுகிறது என்றும் குழந்தைகளுக்கு இளம் வயதில் சக்திக்கு மீறிய வேலை தரப்படுகிறது என்றும் மேலும் சமூக முன்னேற்றத்துக்கும் ஓரளவு தடைக்கல்லாக விளங்குகிறது என்றும் விளக்கினர்கள். பதினேழு வாக்குகளால் பொருள் தோற்றது.

30–10–1953-ம் நாள் இம்மன்ற நிகழ்ச்சிகளுள் ஓர் சிறந்த நாள். சென்னை மாவட்டக் கல்வி மந்திரியும் நிதிமந்திரியுமாகிய உயர்திரு. சி. சுப்ரமணியம் அவர்களும் சென்னை மாவட்ட மராமத்திலாகா மந்திரி உயர்திரு. ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி அவர்களும் வந்து பேசும் வாய்ப்பினை இம்மன்றம் பெற்றது. கல்லூரிக் காப்பாளர் தலைமை வகிக்க விசாலாட்சி உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியை திருமதி K. இரங்கநாயகி அவர்கள் வரவேற்பிதழை வாசித்தளித்தனர். காப்பாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

12–11–53 ல் இம்மன்றத்தின் ஏழாவது கூட்டம் நடைபெற்றது. விவாதத்துக் குரிய பொருள் 'ஒழுக்க வாழ்வுக்கு மதம் தேவை' என்பதே. பலர் ஒட்டியும், வெட்டியும் தம் தம் கருத்துக்களை நல்க அதிகமான வாக்குகளால் தீர்மானம் வெற்றிபெற்றது.

இம்மன்றத்தின் எட்டாவது கூட்டம் குமாரி கோ. விஜயம் தலைமை தாங்க "உலக சமாதானத்துக்குப் போரே வழி" என்ற தலைப்பில் நிகழ்த்தப் பெற்றது. இதனை திலகவதியும், P. K. இராச இலக்குமியும் எடுத்து மொழிய சுலோச்சனவும், N. V. சரோஜாவும் தடுத்து மொழிந்தனர். பலர் பின்பற்றிப்பேச அதிகமான வாக்குகளால் பொருள் வெற்றி பெற்றது.

இம்மன்றத்தின் ஒன்பதாவது கூட்டம் சிறப்புக்கூட்டமாக அமைந்தது. கோவை P. S. G. கலைக் கல்லூரியில் நிகழ்த்தப்பெறும் P. S. G. அரங்கசாமி நாயுடு அவர்களின் நினைவுச் சொற்போர்ப் போட்டிக்கு மாணவியர் தேர்ந்தெடுப்புக்கூட்டமாக இது அமைந்தது. "மொழி வாரி மாகாணப் பிரிவினை நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்டும்" என்ற தலைப்பில் பலர் பேசினர். முடிவில் திலகவதியும் மைதிலியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பயிற்சி அளித்தற் பொருட்டு அடுத்தடுத்து சில கூட்டங்கள் கூட்டப்பெற்றன. 'தொழில்கள் தேசியமயமாக்கப்படல் வேண்டும்' 'கூட்டுக்கல்வி நாட்டுக்கு இன்றியமையாதது', 'நாட்டின் வளத்தைப் பெருக்கப் பொருளாதார முன்னேற்றமே முதல் தேவை' என்ற தலைப்புகள் இக்கூட்டங்களில் விவாதிக்கப்பட்டன.

27-11-53 அன்று P. S. G. கலைக் கல்லூரியில் நடந்த அரங்கசாமி நாயுடு நினைவுச் சொற்போர்ப்போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை யாம்பெற்றோம். 'வயது வந்தோர் யாவர்க்கும் வாக்குரிமை அளித்தால் நாட்டின் நலன் பாதிக்கப்படுகிறது' என்ற தலைப்பு விவாதத்திற்கு உரியபொருளாக அமைந்தது. பெண்களுக்குரிய சிறப்புப் பரிசினை திருமதி திலகவதி பெற்றார்.

18-1-54 ம் நாள் இம்மன்றத்தின் சிறப்புக்கூட்டம் ஒன்று கூட்டப் பெற்றது. அவ்வமயம் கல்லூரிக் காப்பாளர் உயர்திரு. G. V. கோவிந்தசாமி நாயுடு அவர்களின் தலைமையில் கலைமகள் ஆசிரியர் உயர்திரு. கி. வா. ஜெகந்நாதன் அவர்கள் அரியதொரு சொற்பொழிவாற்றினார்கள். 'விஞ்ஞானம் வளர்த்த நாகரிகம் ஆக்க வேலைக்குப் பயன்பட வேண்டும்' என்பதையும் 'மனிதன் விளம்பரத்தை விழையாது பொதுநலத்தொண்டு செய்யும் நோக்கத்தோடு வாழவேண்டும்' என்பதையும் அவர் வலியுறுத்தினர். துணைத் தலைவர் திருமதி சிவானந்தவல்லி அவர்கள் நன்றி கூறினார்கள்.

28—1—54 ம் நாள் வியாழன் மாலை இம்மன்றத்தின் சார்பில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. திரு G. V. கோவிந்தசாமி நாயுடு தலைமை வகித்தார். திருமதி பிச்சம்மாளின் இறைவணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய சொற்பொழிவாளர் "தமிழ் பெண்களின் சமுதாயம்" என்ற தலைப்பினை மேற்கொண்டு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற பண்புகள் பெண்களுக்கு அழகு செய்வதற்கே யொழிய அடிமை வாழ்வு வாழ்வதற்கு அல்ல என்பதை உறுதிப் படுத்தினர். துணைத்தலைவர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

இரங்கற் கூட்டங்கள் :—

இந்த ஆண்டிலே நம் தமிழன்னையின் இரு பெரும் புதல்வர்களாக விளங்கிய திரு. வி. கலியாண சுந்தரனார், பண்டிதமணி, மு. கதிரேசஞ் செட்டியார் ஆகிய இருவர்களின் மறைவிற்கு வருத்தம் தெரிவிக்கும் கூட்டங்களிரண்டு கூட்டப்பெற்றன. திருமதி K. சிவானந்தவல்லி B. A (Hons) அவர்கள் திரு. வி. க. மறைவுக்கு அநுதாபம் தெரிவிக்கும் போது தமிழ்த் தென்றல் மறைந்ததாயினும் அது தவழ்ந்த காலத்தில் வீசிய நறுமணம் "இலக்கியப் பூங்காவில்" என்றும் வீசும்வகை செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். பண்டித மணியின் பிரிவுத்துயரை சொற்களில் வடித்த பிறகு, அனைவரும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டதோடு கூட்டம் முடிவெய்தியது.

2—2—54-ம் நாள் மாலை ஐந்து மணிக்கு நம் கல்லூரிக் கழகத்தின் இறுதிக் கூட்டத்தில் பாலக்காடு அரசினர் விக்டோரியா கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு மு. வெங்கிடசாமி M. A. அவர்கள் "அன்றும் இன்றும்" என்பது பற்றி ஓர் இனிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். கல்லூரிக் காப்பாளர் உயர்திரு G. V. கோவிந்தசாமி நாயுடு அவர்கள் தலைமை வகித்தார். சொற்பொழிவுக்குப் பின்னர் இசை நாடக நிகழ்ச்சிகள் நடைபெற்றன. துணைத்தலைவர் திருமதி K. சிவானந்தவல்லி B. A. (Hons) அவர்கள் நன்றி கூற விழா இனிது முடிவடைந்தது.

வாழ்க தமிழ் ! வளர்க மன்றம் !!

2—2—'54

இம்பீரியல் பிரஸ், உடுமலைப்பேட்டை.

കുഞ്ചൻനമ്പ്യാരുടെ കവിതാരീതി

ഭാഷാസാഹിത്യനഭസ്സിൽ പ്രഭാപൂരം പരത്തിയ ഒരനശ്വര താരമാണ് മഹാകവി കുഞ്ചൻ നമ്പ്യാർ. അദ്ദേഹം ഇന്നാരാദ്ധ്യനായിരിക്കുന്നത് ഒരു ഹാസ്യ സാഹിത്യകാരനെന്ന നിലയിലാണ്. ഭാവി തലമുറകൾക്കദ്ദേഹം ബഹുമാനപാത്രമായി ത്തീരുന്നതും അതുകൊണ്ടായിരിക്കാം. ലളിതമായ ഭാഷ, നിർദ്ദോഷമായ ഫലിതം, മർമ്മഭേദിയായ പരിഹാസം, സരസമായ വർണ്ണനം ഇവയാണ് കുഞ്ചൻ നമ്പ്യാരുടെ കവിതയ്ക്കുള്ള പ്രത്യേകതകൾ. പണ്ഡിതപാമരന്മാർക്ക് ഒരുപോലെ സുഗ്രാഹ്യവും രസപ്രദവും ആയ രീതിയിലാണ് അദ്ദേഹം കവിതയെഴുതിയിട്ടുള്ളത്.

താൻ സാധാരണ ജനങ്ങളെ ഉദ്ദേശിച്ചാണ് കവിതയെഴുതിയിട്ടുള്ളത് എന്നദ്ദേഹം പല സ്ഥലങ്ങളിലും വ്യക്തമാക്കിയിട്ടുണ്ട്. "കീചകവധ"ത്തിൽ അദ്ദേഹം പറയുന്നതു നോക്കുക.

'ഭാഷയായ് പറയാനുമടിയനു സംസ്കൃതത്തിലുമൊന്നുപോൽ
ദോഷഹീനപടുത്വമല്പമുദിപ്പതുണ്ടിവിടന്നതിൽ
ശേഷിയില്ല ഭടജ്ജനങ്ങൾ ധരിച്ചിടാകുടു സംസ്കൃതം
ഭാഷയായ് പറയാമതിൽ ചില ദൂഷണം വരുമെങ്കിലും.

മറ്റൊരു സ്ഥലത്ത് അദ്ദേഹം പറയുന്നത് ഇങ്ങിനെയാണ്.

"ഭടജ്ജനങ്ങളുടെയിടയിലുള്ളൊരു പടയണിയ്ക്കുചിത ചേരുവാൻ
വടിവിയന്നൊരു ചാരുകേരളഭാഷതന്നെ ചിതം വരൂ."

ഇപ്രകാരം വളരെ ലളിതമായ ഭാഷയിൽ കവിത എഴുതിയതുകൊണ്ടാണ് അദ്ദേഹം പൊതുജനങ്ങളുടെ ആരാധനാപാത്രമായിത്തീർന്നതും. ഇത്രയധികം ലാളിത്യം കവിതയിൽ തുളുമ്പുന്നതുകൊണ്ട് അദ്ദേഹം ഒരു പണ്ഡിതനല്ലെന്ന് നാം തെറ്റിദ്ധരിക്കരുത്. "ധ്രുവചരിതം" തുള്ളലിൽ നിന്ന് അദ്ദേഹം കാവ്യനാടകാലങ്കാരങ്ങൾ മാത്രമല്ല, വ്യാകരണത്തിലെ ഉപരിഗ്രന്ഥങ്ങൾ കൂടി വായിച്ചിരുന്നു എന്നു തെളിയുന്നുണ്ട്. അദ്ദേഹം തന്റെ കവിതയിൽ പല സ്ഥലങ്ങളിലും പണ്ഡിതന്മാർക്ക് മാത്രം പ്രയോഗിക്കുവാൻ സാധിയ്ക്കുന്ന ചില പദങ്ങളെല്ലാം പ്രയോഗിച്ചതായും കാണുന്നുണ്ട്.

നമ്പ്യാരുടെ ഫലിതപ്രയോഗപാടവം സുപ്രസിദ്ധമാണ്. ദീപസ്തംഭത്തെ വർണ്ണിയ്ക്കുവാനായി മഹാരാജാവു കല്പിച്ചതനുസരിച്ച് ധനത്തെ ഇച്ഛിച്ച് പലരും കവിതയെഴുതി. നമ്പ്യാർ അവരെ ഫലിതം നിറഞ്ഞ ഭാഷയിൽ പരിഹസിക്കുന്നതു നോക്കുക.

"ദീപസ്തംഭം മഹാശ്ചര്യം നമുക്കും കിട്ടണം പണം
ഇത്യർത്ഥ ഏഷാം ശ്ലോകാനാം അല്ലാതൊന്നും നവിദ്യതെ."

മനസ്സാക്ഷിയ്ക്ക് വിരോധമായി തമ്പുരാനെ രസിപ്പിക്കുവാൻ മാത്രം പാൽപ്പായസം കയ്ക്കുന്നു എന്നു പറഞ്ഞ നമ്പൂതിരിമാരെ "അടിയനു ഈ കയ്പ്പ് ഇഷ്ടമാണ്. പഞ്ചസാരയുടെ കയ്പല്ലേ" എന്നു പറഞ്ഞ് ഇളിഭ്യനാക്കിയതും ഇതിലേക്ക്

മതിയായ ഉദാഹരണമാണ്. തുള്ളൽ കൃതികളെ ഇത്രയധികം ആകർഷകമാക്കിത്തീർത്തിട്ടുള്ളതുതന്നെ അതിലെ ഫലിതപ്രയോഗങ്ങളാണ്. ദുര്യോധനൻ കാട്ടിലേക്കു പോയതു്

"കണ്ണൻ വാഴകണക്കെ തടിച്ചൊരു പൊണ്ണൻ മാരുതി മലയുടെ മൂട്ടിൽ
കണ്ണുമയങ്ങി വിശന്നു തളർന്നൊരു മണ്ണിൽ മലർന്നുകിടന്നുഴലുന്നതു" കാണാനത്രെ.
"കെട്ടിയ പെണ്ണിനെ മടിക്കൂടാതെ കിട്ടിയ വടികൊണ്ടൊന്നുകൊടുത്തു
ഉരുളികൾ ചെമ്പുകളൊക്കെയുടച്ചു ഉരലുവലിച്ചഥ കിണററിലെറിഞ്ഞു
അതുകൊണ്ടരിശം തീരാഞ്ഞവനപ്പുരയുടെ ചുററും മണ്ടിനടന്നു."

എന്നും, പടകേട്ടോടിയ കോലാഹലത്തിൽ

"കണ്ടച്ചാരുടെ മുണ്ടും പോയി ചെണ്ടക്കാരുടെ ചെണ്ടകൾ പോയി
ചക്കിപ്പെണ്ണിനു ചരടും മിന്നുമ-ലക്കിയതോരൻ മുണ്ടും പോയി"

എന്നും മററും എത്ര ഫലിതം നിറഞ്ഞ രീതിയിലാണ് അദ്ദേഹം വർണ്ണിച്ചിരിക്കുന്നതു്.

സമുദായത്തിലുള്ള ദുരാചാരങ്ങളെ അകററണം എന്നതായിരുന്നു അദ്ദേഹത്തിൻെറ മുഖ്യോദ്ദേശം. ഇതിന്നദ്ദേഹം മർമ്മസ്പൃക്കായ പരിഹാസമാണ് ആയുധമായി സ്വീകരിച്ചതു്. അദ്ദേഹത്തിന്നു് വ്യക്തികളോടു് ഒരിക്കലും വിദ്വേഷം ഉണ്ടായിരുന്നില്ല. അതുകൊണ്ടാണ് അദ്ദേഹത്തിൻെറ കവിതയിലെ പരിഹാസം ഇന്നും നമ്മെ രസിപ്പിക്കുന്നതു്. അസൂയ, അഹങ്കാരപ്രമത്തത, ധനതൃഷ്ണ, കാപട്യം, മുതലായവയെ 'നമ്പ്യാർ കണക്കില്ലാതെ പരിഹസിച്ചു. പരിഹസിക്കുവാൻ കിട്ടുന്ന സന്ദർഭങ്ങളെയൊന്നും അദ്ദേഹം പാഴാക്കാറില്ല. പട്ടന്മാരുടെ ധനതൃഷ്ണയെ അദ്ദേഹം വർണ്ണിച്ചിരിക്കുന്നതു നോക്കുക.

"മുതുവിപ്രൻ പണമെന്നോർക്കുമ്പോൾ പുതുവിപ്രൻ താനെന്നൊരുഭാവം
കാശിക്കപ്പുറമെങ്കിലുമിന്നൊരു കാശിനുവകയുണ്ടെന്നാൽ മണ്ടും.
എഴുപത്തെട്ടുവയസ്സുതികഞ്ഞൊരു കിഴവബ്രാഹ്മണനിതപോകുന്നു
കൊടുവെയിൽ തട്ടിച്ചുട്ട കഷണ്ടിയിലൊരുപിടിനെല്ലാൽ മലരുപൊരിക്കാം."
"പൂരുവംശത്തിൽ പിറന്നുവളർന്നൊരു പൂരുഷശ്രേഷ്ഠൻ വൃകോദരനെന്നൊരു
വീരനെ കേട്ടറിവില്ലേ നിനക്കെടോ? ധീരനാമദ്ദേഹമിദ്ദേഹമോർക്ക നീ"

എന്നാണ് ഭീമസേനൻെറ ഗർവ്വിനെപ്പററി അദ്ദേഹം "കല്യാണസൌഗന്ധിക"ത്തിൽ വർണ്ണിച്ചിരിക്കുന്നതു്. ഈ വിഷയത്തിൽ അദ്ദേഹത്തിന്നു ജാതിമതവ്യത്യാസമൊന്നുമുണ്ടായിരുന്നില്ല.

"ഘടബെടുവാവിട്ടുവിണ്ടകണക്കേ പോടടമത്തക്കറികിറിസാദം
ഇങ്ങനെ പിശകി വിളമ്പിച്ചങ്ങനെ ചിങ്ങൻ പഴവും തൈരും കൂട്ടി
പളുവിളെയാക്കിശേഷിപ്പിച്ചതു വളുവളെ വാരിവിതച്ചുതിരിച്ചു"

ഇപ്രകാരം പട്ടന്മാരുടെ സദ്യക്കൊതിയെപ്പററി പരിഹസിക്കുന്ന കവി തന്നെയാണ്

"ഞായം നോക്കിനടപ്പാൻ നമ്മുടെ നായന്മാരു പഠിച്ചിട്ടില്ല;
നായും നായരുമൊക്കുമിനിക്കൊരപായം വരുമെന്നുള്ളവിചാരം
രണ്ടുവിധത്തിനുമില്ല തരിമ്പിതു മിണ്ടുകിലായവർ ശുണ്ഠിയെടുക്കും"

എന്നു നായന്മാരേയും പരിഹസിച്ചിരിക്കുന്നതു്.

ഏഷണിക്കാരായ രാജസേവകന്മാർ, കാമകിങ്കരന്മാരായ ഉദ്യോഗസ്ഥന്മാർ, ബഹുഭാര്യാത്വം ഒരന്തസ്സാണെന്നു കരുതിയിരുന്ന പ്രഭുക്കന്മാർ, ഭാര്യമാർക്ക് ദാസ്യവൃത്തി ചെയ്യുന്ന വിഡ്ഢികൾ, ഭർത്താക്കന്മാരെ കരങ്ങുകളിപ്പിക്കുന്ന ഭാര്യമാർ മുതലായവരെല്ലാം നമ്പ്യാരുടെ പരിഹാസശരത്തിന്ന് പാത്രീഭൂതരായവരാണ്.

"നാലഞ്ചുഭർത്താവൊരുത്തിയ്ക്കു താനതു നാലുജാതിയ്ക്കും വിധിച്ചതല്ലോക്കണം
നാലുപേർ കേട്ടാൽ നിരക്കാത്ത വസ്തുവി
വാലുള്ള വാനരന്മാർക്കും ചിതം വരാ."
"രണ്ടുകളത്രത്തെയുണ്ടാക്കിവെയ്ക്കുന്ന തണ്ടുതപ്പിക്കു സുഖമില്ലൊരിക്കലും."
"അച്ചിയ്ക്കു ദാസ്യപ്രവൃത്തിചെയ്യുന്നവൻ
കൊച്ചിയ്ക്കു പോയങ്ങുതൊപ്പിയിട്ടീടണം."
"കൊല്ലുന്നതിനേക്കാളും ശല്യമായിട്ടുള്ളൊരു
കൊള്ളിവാക്കല്ലാതൊന്നും ചൊല്ലുകയില്ലദ്ദേഹം;
എടുത്തെന്നാലതും കുററം, എടുക്കാഞ്ഞാലതും കുററം,
കൊടുത്തെന്നാലതും കുററം, കൊടുക്കാഞ്ഞാലതും കുററം."
"പെണ്ണിൻെറ ചൊൽകേട്ടു ചാടിപ്പുറപ്പെട്ട
പൊണ്ണൻ മഹാ ദോഷനദ്യോ മഹാ ജളൻ"

ഇങ്ങിനെ എത്രവേണമെങ്കിലും ഉദാഹരണങ്ങൾ നമ്പ്യാരുടെ കൃതികളിൽ കാണുവാൻ സാധിക്കും. സമുദായത്തിൻെറ ആണിവേര് സ്ത്രീകളായതിനാലായിരിയ്ക്കാം അദ്ദേഹം സ്ത്രീകളുടെ കുററങ്ങളെ പ്രത്യേകമായി എടുത്തുകാണിച്ചതു്. അദ്ദേഹം പറഞ്ഞിരിക്കുന്നതു നോക്കുക.

"കനകം മൂലം കാമിനിമൂലം കലഹം പലവിധമുലകിൽ സുലഭം."

ചുരുക്കിപ്പറയുകയാണെങ്കിൽ; അദ്ദേഹം സമുദായത്തിൻെറ സ്ഥിതിയെ മാത്രം ലക്ഷ്യമാക്കിയാണ് കവിതയെഴുതിയതു്.

ചുററുപാടുകളെ കവിതയിൽ പ്രതിഫലിപ്പിക്കുവാൻ നമ്പ്യാരോളം സാമർത്ഥ്യം അധികം പേക്കും കാണുകയില്ല. അയോദ്ധ്യയിലും ലങ്കയിലും അളകാപുരിയിലും ദ്വാരകയിലും എന്നു വേണ്ട സ്വർഗ്ഗത്തിലും പാതാളത്തിലും കൂടി കേരളീയരായിരിക്കും. കേരളത്തിലെ സദ്യയ്ക്കുള്ള വിഭവങ്ങൾ തന്നെയായിരിയ്ക്കും അവിടുത്തെ സദ്യകൾക്കും. വേഷഭൂഷാദികളും ആചാരങ്ങളും കൂടി കേരളത്തിൽ കാണുന്നതുതന്നെ. അദ്ദേഹം സീതാസ്വയംവരത്തിലെ ഒരു ഭാഗം ഇങ്ങനെയാണ് വർണ്ണിച്ചിരിക്കുന്നതു്:

"കുപ്പായക്കൂട്ടങ്ങൾ, മണപ്പാടൻ മുണ്ടുവക,
ഉുപ്പട്ടുറുമാൽ, മെത്തിപ്പട്ടും വീരവാളിയും,
തൊപ്പിചകലാസ്സുകൾ, കുപ്പികണ്ണാടികളും
ചെപ്പും ചിമിഴുകൾ കുരുപ്പും കരിമ്പടവും
തപ്പുകൊണ്ടങ്കികൾ വിരിച്ചുകോസടികൾ ചെ-
രിപ്പു, പലവിധം പയറുഴുന്നും."

നമ്പ്യാരുടെ രുഗ്മിണിസ്വയംവരം പാരായണം ചെയ്യുന്ന ഏതൊരുവനും അതു് അമ്പലപ്പുഴയോ മറേറാ നടന്നതാണെന്നേ തോന്നുകയുള്ളു. രാവണസൈന്യം ശത്രുരാജ്യങ്ങളെ ആക്രമിക്കുവാൻ പോകുന്നതിങ്ങിനെയാണ്

"അമ്പലമൊക്കെത്തീണ്ടിത്തൊട്ടും നമ്പൂരാരുടെ ഭവനം തൊട്ടും
എമ്പ്രാന്തിരിയെത്താടിച്ചും പുന-രമ്പലവാസികളെക്കൊലചെയ്തും"

സൂക്ഷ്മസ്വഭാവം വർണ്ണിച്ച് അനുവാചകരുടെ ഹൃദയത്തിൽ അതിന്റെ വ്യക്തമായ ഒരു രൂപം പതിപ്പിയ്ക്കുന്നതിന് നമ്പ്യാക്കുള്ള കഴിവ് ഒന്നു വേറെ തന്നെയാണ്. അദ്ദേഹത്തിന്റെ കദളീവനവർണ്ണന ഇതിന് നല്ലൊരുദാഹരണമാണ്. നോക്കുക.

"പച്ചക്കദളിക്കുലകൾക്കിടയ്ക്കിടെ മെച്ചത്തിൽ നന്നായ് പഴുത്തപഴങ്ങളും
ഉച്ചത്തിലങ്ങിനെ കണ്ടാൽ പവിഴവും പച്ചരത്നക്കല്ലുമൊന്നിച്ചുകോർത്തുള്ള
മാലകൾ കൊണ്ടു വിതാനിച്ച ദിക്കെന്നു മാലോകരൊക്കെയും ശങ്കിയ്ക്കുമാറുള്ള
ലീലാവിലാസേനനില്ക്കുന്ന വാഴകൾ നാലുഭാഗങ്ങളിൽ ത്തിങ്ങിവിങ്ങിത്തദാ"

പാത്രസൃഷ്ടിയിലും അദ്ദേഹം കുറെയെല്ലാം വിജയം കൈവരിച്ചിട്ടുണ്ട്. രാവണൻ, ദുര്യോധനൻ, ദേവേന്ദ്രൻ തുടങ്ങിയവരെ അദ്ദേഹം ഒന്നാന്തരം വങ്കപ്രഭുക്കന്മാരായി ചിത്രീകരിച്ചിരിക്കുന്നു. കണ്ട പെണ്ണുങ്ങളുടെകൂടെ തെണ്ടിത്തിരിയാനല്ലാതെ മറെറാന്നിനും അദ്ദേഹത്തിന്റെ ദേവേന്ദ്രന് കഴിവില്ല. ധർമ്മപുത്രരുടെ സഭയിൽ "വീരാളിപ്പട്ടു ഞെരിച്ചുകയററി കുന്തിച്ചു, കുന്തിച്ചു കയറിചെല്ലുന്ന"ദുര്യോധനന്റെ ചിത്രം സഹൃദയനായ ഒരുവനും മറക്കയില്ല. എങ്കിലും അദ്ദേഹം ചില സമയത്തിലെല്ലാം ഔചിത്യബോധമില്ലാതെ പെരുമാറിയിട്ടുണ്ട്. കല്യാണസൌഗന്ധികത്തിൽ വളരെയധികം വീരപരാക്രമണങ്ങൾ കാട്ടിപ്പുറപ്പെടുന്ന ഭീമസേനനെ

"പെണ്ണിന്റെ ചൊൽകേട്ടു ചാടിപ്പുറപ്പെട്ട
പൊണ്ണൻ മഹാ ഭോഷനേഷ്യാ മഹാ ജളൻ"

ഇത്രയധികം താഴ്ത്തിയിട്ടാണ് വർണ്ണിച്ചിട്ടുള്ളത്. വ്യാസന്റേതിൽ നിന്ന് വ്യത്യാസപ്പെട്ട

"പതികളൊന്നല്ല രണ്ടല്ല മൂന്നല്ല ചതുരവീരന്മാരഞ്ചുണ്ടു കാന്തന്മാർ"
എന്നു പറയുന്ന ഒരു പാഞ്ചാലിയാണ് കുഞ്ചൻനമ്പ്യാരുടേത്.

ഇങ്ങനെയൊരു കവിസാർവ്വഭൌമനെ ലഭിച്ചതിൽ നമ്മുടെ മാതാവായ കേരളം തീർച്ചയായും അഭിമാനാർഹയാണ്. കേരളീയർ ഭാഗ്യവാന്മാരാണ്. "കുഞ്ചൻ നമ്പ്യാരെപ്പോലെ സ്വതന്ത്രസ്വതന്ത്രനായ ഒരു കവി സാർവ്വഭൌമൻ ഒരു രാജ്യത്തും ഒരു കാലത്തും ജീവിച്ചിരുന്നിട്ടില്ലെ"ന്ന് മഹാകവി ഉള്ളൂർ അഭിപ്രായപ്പെട്ടതിൽ അതിശയോക്തിയ്ക്ക് യാതൊരവകാശവുമില്ല. ഇനിയും ഇത്തരത്തിലുള്ള ഹാസ്യസാഹിത്യകാരന്മാരുടെ മാതൃസ്ഥാനം വഹിയ്ക്കുന്നതിനുള്ള ഭാഗ്യം കേരളത്തിന് സിദ്ധിയ്ക്കുമാറാകട്ടെ.

P. DEVI,
I. U. C.



युगावतार संत

By T. S. Saraswathi
I. U. C.

" परित्राणाम साधूनाम् विनाशाय च दुष्कृताम
धर्म संस्थापनार्थाय संभवामि युगे युगे "

गीता के उपर्युक्त श्लोक के अनुसार जब समाज में ध्येष, दंभ धोखा घृणा, अहंकार पाशविकता आदि अत्याचार का ताण्डव चरम सीमा को पहुँचते है तब ऐसे साहसियों का जन्म होता है जो जान पर खेलकर भी मानवता की शुध करते। बुद्धा, ईसा, मुहम्मद, व गान्धी आदि इसी अवश्यकता के मूर्ति हैं। इन कर्मवीर त्यागियों ने पतनोन्मुख सृष्टि को उन्नति के मार्ग दिखलाकर पथ पदर्शन किया।

जब भारतीय धर्म भावना में एक विदेशी धर्म का संघर्ष शुरु हुआ तो राम और रहीम, मंदिर और मसजिद के नाम पर घोर हत्याकांड शुरु हुआ। समाज के ठेकेदार उच्च वर्ग के लोग ही खमझे जाते थे। उनके रीति नियमों के जटिल बधन में जकडे हुए निम्न वर्ग के लोग अछुत समझे जाते थे। धर्म तो वास्तविकता से दूर वाह्य आडंबर पूजा, व्रत, तप आदि का बडी बना हुआ था। संक्षेप में वह युग राजनैतिक अशांति का सामाजिक क्रांति का धार्मिक तथा दार्शनिक आन्दोलन का था। इस तरह दुःख, निराशा, अत्याचार, अन्याय के प्रवाह में असहाय बहनेवाली भारतीय जनता को बचाने केलिये एक साहसी एक जबर्दस्त व्यक्ति की जरूरत थी।

समय की ऐसी कठोर माँग थी कि पुण्य पूरि काशी में 'लहर तालाब' के किनारे एक शिशु नीमा और नीरत को पडा मिला। नीमा-नीरत मुसलमान होते हुए भी हिन्दू रहन सहन, रीति रिवाज़ का अनुसरण करते थे। वह शिशु "कबीर" पर दोनों सस्कृति नीर क्षीर की तरह मिल गयी। साधु संतो की संगति ने उन्हें चिंतनशील व मननशील बनाया संत बनाया। कबीर न हिन्दु थे न मुसलमान। वे मानते थे कि सारी सृष्टि एक परम सत्ता के संकेत से संचालित हो रही है। मानव मात्र उसके अश हैं। फिर यह भेद भाव क्यों हम हिन्दु हैं "तुम तुरुक" पोथी पंगों से उनकी जिज्ञासा की प्यास नहीं बुझा। इसलिये वे सारग्राही बने। उपासना के आडबर, जप, माला, तप, व्रत का खंडन किया बोले यह सुमिरन नहीं है। पत्थर को पूजने से ईश्वर मिल सकता तो मैं पहाड को पूजने केलिये तैयार हूँ। पर अज्ञान से प्रभावित समाज ऐसा पागल था कि "साँच कहौं तो मारन धावै"। पर कबीर शूर थे। "शूर संग्राम देखि भागै सोई" शूर नाहिं के गरजनेवाले थे। उनके अन्तर से जो ध्वनि निकली उसको निभाक होकर प्रकट किया। सत्य औषधि की तरह कड होता है। अतः अप्रिय होता है। समाज को उनका कथन अप्रिय लगा। हिन्दु मुसलमान दोनों ने उन्हें अनपट निगुरा, काफिर, म्लेच्छा-कहना शुरु किया। मगर कबीर ने उन निंदकों को समालोचक बताया और उसे जीवन के लिए आवश्यक वस्तु समझाया।

" निंदक नियरे राखिये, आंगन कुटी छवाय।
बिन पानी साबुन बिना, निर्मल करे सुभाय॥ "

फिर सत्य ज्ञान की बात सुनने के लिए जाति पाँति के विचार करनेवालों से कबीर कहते थे,

" जाति न पूछो साधु की, पूछ लिलीजिए ज्ञान " वे गुरु के महत्व को जानते थे। काम, क्रोध, लोभ आदि से भरे इस संसार में गुरु के बिना कौन ज्ञान का मार्ग बनाने में समर्थ है। अतएव कबीर कहते हैं,

" गुरु बिन कौन बतावे बाट बड़ा बिकट यम घाट " कबीर ने रामानन्दजी को अपना गुरु माना। कहते हैं कि पहले रामाचन्द्रजी ने इन्हें शिष्य बनाया स्वीकार नहीं किया। लेकिन इनकी भक्ति व तन्मयता देख अन्त में इन्हें अपना शिष्य बन लिया। गुरु के महत्व को अपने एक दोहे में लिखते हैं कि " सब धरती कागद करूँ लेखनी सब बन राय।
सात समुंदर मसि करूँ गुरु गुना लिखा न जाय ॥ "

कबीर भक्त थे। पर निर्गुणोपासंक थे। इनमें ज्ञान की प्रधानता थी। राम नाम का उपदेश व उपासना करते थे। पर उनका राम 'तुलसी' की तरह दाशरथी 'राम' न होकर निर्गुण, निराकार थे। वे गूँगे के गुड के समान थे जिसका अनुभव तो कर सकते हैं। किन्तु प्रत्यक्ष देख नहीं सकते कबीर रामानन्द के शिष्य होने के कारण एक ओर जहाँ भारतीय अद्वैतवाद से प्रभावित हुए वहाँ दूसरी ओर सूफियों के प्रेम मार्ग से। इन दोनों के सम्मिश्रण से इन्हों ने अपने पंथ की स्थापना की। कबीर के मतानुसार माये के परदे के हट जाने से आत्मा और परमात्मा का एकीकरण हो जाता है। इसलिये कहा गया है —

" घूँघट के पट खोल रे! तोको पीव मिलेंगे "। पर यह हँसी खेल नहीं—इसके लिये अहिंसा, संतोष, दया, सारसंग्रह, कामिनी-कंपन त्याग, विचार शुध्दि जैसे नैतिक गुण आवश्यक बतलाये गये।

कबीर बडे सुधारक युगप्रकर्यक थे। जीवन को नया दृष्टिकोण देनेवाले थे। आत्मविश्वास के साथ उन्होंने अपने अनुभव को सच्चाई के साथ हमारे सामने रखा है। कबीर का व्यक्तित्व एक ऐसा संग्रह था कि सभी प्रकार की खूबियाँ उनमें खूथीं। हिन्दू के यहाँ जन्म लेकर मुसलमान के घर पले थे। अपना कोई धर्म नहीं था। उनमें मौलिक प्रतिभा थी। हिन्दू और मुसलमान के विच जो खाई दिन ब दिन बढती जा रही थी; जो धार्मिक द्वेष भयंकर रूप धारण कर चुका था। उसे दूर करने में कबीर ने कोई बात उठा नहीं रक्खा। उन दोनों की बुराइयों के प्रति अपने मत व विचार को निर्भीकता और स्वतंत्रता के साथ प्रकट किया।

" अरे इन दोउन राह न पाई,
हिन्दुअन की हिन्दुआई देखी, तुरुकन की तुरुकाई "

हिन्दुओं के तीर्थ, उपवास, जप-तप को ढोंग समझकर यों खउन करते थे कि

" माला तो कर में फिरै, जीभ फिरै मुख माहिं।
मनवा तो दह दिशि फिरै, यह तो सुमिरन नाहिं ॥ "

मुसलमानों के रोज़ा नमाज़ से भी उन्हें चिढ थी। उनकी कुरबानी की हिंसा से दुखी होकर कहते हैं

" दिन को रोज़ा रखत है रात हनत है गाय।
यह तो खून वह बंदगी कैसी खुशी खुदाय ॥ "

कबीर निम्न जनता के वक़ील थे। छुआछूत, जाति पॉति के भोदभाव को वे नहीं मानते थे। उनके उपदेशों से यह भी स्पष्ट रूप से मालूम होता है कि तत्कालीन सामाजिक कुरीतियों व पापों में कोई भी ऐसा न रहा जो उनके ध्यान को आकृष्ट न कर सका था। सभी बुराइयों व पापों को दूर करने केलिए वे उपाय भी बताते थे। उन्होंने अपने समय के समाज पर बडा असर डाला। उन्होंने सादियों से प्रचलित अन्ध विश्वासों पर विजय पाकर अपने उपदेशों के द्वारा मनुष्यों के बीच में भाईचारे को स्थापित किया। लाखों करोडों केलिए उनके वचन पथ प्रदर्शक साबित होते हैं। उनकी रचनाओं में ऐसे सुन्दर नीति रत्न भरे पडे हैं, जिन्हें अपनाने से मानव जीवन का उद्धार हो जायगा। निम्न वर्ग की ऊपर उठाने का, हिन्दु मुसलमानों में एकता लाने का, धार्मिक कर्मकांडों में जकडे हुये जनता को माया के फंदोंसे छुडाने का और सबसे बढकर आध्यात्मिक तत्व जैसे गूढ विषयों को जनता की बोली में दोहे व पदों के रूप में सुलभ बनाकर आचरण की शुद्धता पर जोर देने का जो जो स्तुत्य कार्य किये उनकेलिए भारतीय जनता कबीर के चिर ऋणी हैं, ऋणी रहेगी।

कबीर के संबन्ध में अकसर यह कहा जाता है कि वे पढे लिखे नहीं थे। वे सिर्फ सिद्धांतवादी के उपदेशक थे। काव्य कला के लक्षण उनमें नहीं है। हमें यह ठीक समझना चाहिए कि कबीर का प्रादुर्भाव ऐसे समय में हुआ जब कि भारत की राजनैतिक, सामाजिक, धार्मिक, और आर्थिक अवस्था अत्यन्त बुरी थी। कबीर प्रथम समाज सुधारक व उपदेशक थे बाद को कवि। क़ाव्यकला की दृष्टि से उनके साहित्य का अध्ययन करना उनके साथ अन्याय करना होगा। उनका मुख्य लक्ष्य धार्मिक तथा सामाजिक सुधार था। कविता तो साधन मात्र थी। कबीर बदश्रुत थे। उन्हों ने जो कुछ भी कहा संतों व महात्माओं के संगति द्वारा प्राप्त ज्ञान से ही कहा, उन्हें शास्त्र-गार्भ पढ़ने का अवसर ही न मिला। वे निरक्षर थे। उन्हों ने स्वयं लिखा है "मसि कागद छुथो नहीं कलम ग[illegible] हाथ"।

उन्होंने अलंकार रीति ग्रन्थों का अध्यायन करके कविता नहीं की। सरल सीधी वाणी का असर दिल पर पडता है। सरल भाषा में ग्रामीणों की समझ में आनेवाली भाषा में होने के कारण वे आप भी लोकोक्तियों व कहावतों के रूप में अधिक प्रचालित हैं। कला पक्षा कम होने पर भी भाव पक्ष अधिक है। वे क्रांतिकारी प्रतिभावान कवि थे। उनकी महिमा किसी युग में भी छिप नहीं सकती। इनकी वाणी को जब 'साहित्य' कह सहते हैं। मामूली लोगों से लेकर सब आसानी से समझ सकते हैं। उनका जीवन समृद्ध व फलदायक था। संयुक्त प्रांत के गोरखपूर जिले में अपनी देह को त्यागे कबीर को अब 400 वर्ष हो गये हैं। मगर उनकी वाणी ने साहित्य और धर्म में युगान्तर ला दिया। कबीर निसंदेह युगावतार संत हैं। कबीर और उनकी वाणी अमर है अमर रहेंगी॥

'जय हिन्दी'

स्वार्थी दुनियाँ

By K. C. Indira
I. U. C.

कालेज की ओर चल रहा था। सामने एक बडी भीड देख उसकी ओर चला। देखा कि एक आदमी तो लोगों से घेरा हुआ था। जब मैं उस के पास आया तब मुझे किसीने एक छपा हुआ कागज़ दिया। उस में इस तरह लिखा था।

प्यारे दोस्तो,

मैं भी आप का जैसा एक आदमी हुं। पढा लिखा हुँ। मगर मुझपर लक्ष्मी का कटाक्ष अब तक नहीं हुआ हैं। इसलिए आप के आगे एक बदनसीब के रूप में खडा हुँ। भाई बहनों! मुझ पर कृपा कीजिए और कुछ न कुछ मदद कीजिए।

आप का कृपा कांक्षी,
गोपाल.

मुझे उसे पढ बडा दुख आया और आँखें डब डबा आयी। लेकिन उस समय तो मेरा हाथ निल कुल खाली था। एका एक पैसों के गिरने की खनखनाहट मेरे कानों में पडी फिर कर देखा तो मालूम हुआ कि लोग उस की ओर पैसे फेंक रहे थे। मेरी ओर उसकी दृष्टी पडी। मन में तो देने की जितनी दया थी उतना हाथ में पैसा होता ...... । चुपचाप वहाँ से खिसक गया। उसी समय मेरे कालेज की घंटी बजने की आवाज कानों में सुनायीदी क्लास में जा बैठा। मगर मन तो अनमनीसा रहा। मन पढने की ओर न गया था। कारण यह कि गोपाल की वह कगा वली मूर्ती फिर २ कर चलचित्र की भाँति मेरे सामने दिखायी देने लगी। इसी तरह शाम तक बिताया। सब विद्यार्थी विद्यार्थिनी चले गये। मगर मैं तो बुत सा खडा रहा था।

सूरज डूबने लगा। पशु पक्षी अपनी श्वास स्थल की ओर जाने लगी। सिर्फ मैं एक था। जो दूसरी आलम में अफीम खाये हुए कि भाँति टहल रहा था। न अतीत की स्मृति, न भविष्य की चिन्ता वही एक धुन गोपालकी। इतने में पीछे कुछ आहट हुई। घूम कर देखा तो वही गोपाल। वह मौन खडा था। उसकी आँखें तो मानों यह कह रहा था कि मैं निहायत हुँ। मुझे कुछ न कुछ दीजिए।

वह मुझे भाई कह कर सामने आया। यह भाई संबोधन मुझे कुछ अच्छा न लगा। मगर उसकी आँखें देखते ही मेरा मन मोम हो गया। उसे लेकर एक होटल में दाखिल हुआ और एक गोश में हम दोनों बैठे। जेब में आठन्नी थी। दो ग्लास काफी और चार बज्जी केलिए आर्डर भेजी। वह कुछ नहीं बोला। कुछ देरकेलिए निस्तब्दता फैली हुई थी। मैं ने उससे पूछा, भाई, तुम्हारे माँ बाप भाई दोस्त या भाई बन्धु नहीं है? तुम कैसे इस हाल में पड गये?

मेरे इस प्रश्न की झडी सुन उसकी आँखों में आँसू भरे और आह भरकर मुझे अपनी कहानी सुनानी की चेष्टा की। "भाई मैं ने गरीब कुडुंब में जन्म लिया था। एक समय था जब की हम खुश हाल थे। बाप के मरने से सब कुछ चले गये। माँ और मैं दोनों असहाय, अनाथ और कंगाल बन गये। माँ एक पडोसी घर में मजदूरी करने लगी। माँ के मन को कौन जान सकता है? किसी तरह अपना पेट काट कर पहला फार्म तक पढाया। आखिर गरीबी की अग्नी मेरी पढाई के बीच खडी मुझे रोके हुउ थी। मैं क्लास में अच्छीतरह वाला था। अपनी कहानी हेडमास्टर को सुना दी और वे मेरी इच्छा पूर्नी केलिए तैयार हुए। मगर ईश्वर की मर्जी एस. एस. एल. सी- में फेभिल हो गया।

माँ बीमार पडी थी। बुखार चढ आया। वह हिलडुल तक न सकती थी। हाथ बिलकुल खाली। दवा कैसे? पेट कैसी भरे। मेरी असहाय अवस्था देख एक दोस्त ने मुझे एक रुपया दिया। डाक्टर के पास जाकर अपना दुखडा रोया। उन्होने दवा दी मगर पैसे लेकर।

गोधूली का समय था। काले २ बादल आसमान में चारों तरफ छाए हुए थे। अँधकार तो किसी भयंकर जन्तु की भाँति अपना मुँह खोल कर आगे की ओर बढ रहा था। बीच में तो बिजली गडप रही थी। रह रह कर पानी बरसने लगा। टूटे फूटे घर की छत इस तरह थी कि पानी की एक बूँद भी बाहर नहीं जाती थी। घर लौटा तो देखा कि माँ का दम निकल रहा है। सूर्यदेवता को डूबते २ माता की आत्मा भी डूब गयी। दरिद्ररूपी दावानल में जलती हुई वह महान आत्मा इस पानी की ठंडल से शांति पागयी।

गरीब लोग तो पंख हीन पक्षी के सामान हैं। इसलिए मैं ने आत्म सम्मान को खो दिया और भीख माँगने लगा। उसकी आँखों से अश्रुधारा प्रवाहित होने लगी। उसे साँत्वना देकर बाहर आया।

उसने मुझ से कहा कि भाई, तुम बडे दयालु हो। मैं जब तक जिन्दा रहूँ तब तक आप को मैं नहीं भूलूँगा। इस के सिवाय मैं क्या कर सकता हूँ? ईश्वर की दया तुम पर खूब बरसे। मेरी ख्वाहिश है। मैं कल यहाँ से जाता हूँ।

दूसरे दिन कालेज जा रहा था। आज भी उसी जगह भीड देखी। निकट पहुँचने पर मालुम हुआ कि वही गोपाल कल मेरा मेहनत था अब आत्म हत्या करके अपने करत्तार के मार्ग चल बसा है। पास ही एक चिट्टी पडी थी। पढा तो मालूम हुआ कि वह अपने आत्म सम्मान खो कर जिन्दा रहने पर भी लोग उसे सहायता नहीं पहुँचाते क्यों की दुनियाँ स्वार्थी है।

झट मुझे वर्माजी का वह पंच याद आया और मैं उसे गुन गुनाने लगा।

"मनव्यथित हो फूल! किस को सुख दिया संसार ने
स्वार्थमय सब को बनाया है यहाँ करतार ने।
हाँ! सचमुच दुनियाँ स्वार्थी है। लेकिन
वह उनकी गलती नहीं। ईश्वर की गलती है।

हाय! स्वार्थी दुनियाँ!!!



உவமையின் தோற்றம்

(வஞ்சி)

இவ்வுலக இன்னலுள் தோய்ந்து துன்புறும் மக்கட்கு இன்பம் நல்கும் கருவிகள் பல - இயற்கைக் காட்சிகள், பேசும் படங்கள், மணமலர்ச் சோலைகள், இலக்கியச்சுவை கனிந்த நல்ல செய்யுட்கள் முதலியனவாம். செய்யுட்கள் கற்பவனின் கருத்தைக் கவர்ந்து களிப்பெனும் கடலில் ஆழ்த்துகின்றன. உரைநடை, செய்யுள் இரண்டும் சொற்களினாலேயானவை ஆயினும் செய்யுட்கள் அதிக இன்பத்தைஎண்ணும்தோறும் வரம்புகடந்து செலும் இன்பம் நல்குகின்றன. ஏன்? செய்யுளில் உரைநடையில் இல்லாத ஒன்றைக் காண்கிறோம். அதுதான் உவமை.

உவமைகளினால் அலங்கரிக்கப்படுவதினாலேயே செய்யுட்கள்உரைநடையிலும் உயர்ந்த நிலைபேறுடைய இன்பத்தை நல்குகின்றன. இந்த அணி சொல்லணி, பொருளணி என இருவகைப்படும். அவற்றுள் பொருளணி பலவகைப்படுமேயாயினும், அவற்றுள் முதன்மையாக விளங்குவது உவமையணியேயாகும். பிற்காலத்தே தோன்றிய அணி நூல்கள் இவ்வணிகளை முப்பத்திரண்டு, அறுபத்துநான்கு எனப்பலவாறு கூறினும் தொல்காப்பியம் மற்ற அணிகள் அனைத்தும் உவமையணியின் அடிப்படையிலேயே பிறக்கின்றன என உரைக்கிறது என்பதை அது தன்னகத்தே "உவமவியல்" என ஒரு இயலைத் தாங்கியிருத்தலினாலேயே அறிகிறோம்.

உவமையணி - ஒரு பொருளொடு மற்றொரு பொருளைச் சேர்த்து ஒப்புமை தோன்றக்கூறுதலேயாம். இது ஆங்கிலத்தில் Similee என வழங்கப்படுகிறது. முதற்கண் உவமை எவ்வண்ணம் தோன்றியது? ஒருவன் தான் புதிதாகப்பார்த்த பொருளை அதைப் பார்க்காத ஒருவனுக்குக் கூற முயன்றபோது அணி பிறந்தது. புலியைப் பார்த்தறியாத ஒருவனுக்குப் புலியைப்பற்றி எப்படிக்கூறுவது? நிழற்படமிருப்பின் காட்டலாம். இல்லாவிட்டால் எப்படி? அதற்கு அவர் பார்த்துள்ள மற்றொரு பொருள் தேவைப்படுகிறது. எனவே பூனை போல இருக்கும் (அமைப்பில்) என்கிறோம். எனவே புலியைக்காணாத ஒருவன் அப்புலியை ஒருவிதமாக உள்ளத்தில் உருவகம் செய்துகொள்கிறான். ஆகவே அறிந்தது கொண்டு அறியாத ஒன்றை விளக்குவது எனும் முயற்சியிலேயே உவமை தோன்றியது. காலப்போக்கில் பேச்சுவழக்கிலும், உரைநடையிலும் இடம் பெற்றது; ஆயினும் செய்யுளில் மிகுதியான இடத்தைப் பெற்றது.

உவமை கூறுவதெனில் ஒருபுடை ஒப்புமையேயாகும். ஏன் எனில், உவமையும், உவமிக்கப்படு பொருளும் ஓரளவே ஒத்திருக்கமுடியும். எல்லாவகைகளிலும ஒத்திருக்க முடியாது. அப்படி ஒத்திருக்குமேயாயின் இரண்டும் ஒரே பொருள்தான், வேறுபட்டதன்று. தாமரைமுகம என்றால் நிறம், இதழ், மகரந்தம் முதலியவற்றை நினைத்துக்கொண்டு தேடின் முகத்திலே இவைகளைக் காணவியலுமா? தாமரையின் வட்டமான அமைப்பும், காண்போரைக் கவரும் அழகும்தான் ஒப்பிடப்பட்டது. இதுபோலவே புலிபோலப் பாய்ந்தான் என்பதிலே பாயும் தொழிலே ஒப்புமைப் படுத்தப்படுகிறது.

உவமை கூறுவது எளியதொரு செயலன்று. உலகில்காணும் ஒவ்வொரு பொருளையும் உற்றுநோக்கும் திறமும ஆற்றலும் உடையவனே உள்ளம் உவக்கும் சிறந்த உவமைகளைக் கூறமுடியும். உவமைகள பலவகையாகக் கூறப்படலாம். எது சிறந்த உவமையோ அதுதான் உலகில் நிலைநிற்க முடியும. நாரையின் அலகிற்குப் பலர் பலவகையான உவமைகளைக் கூறினும் "பனம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன பவளக்கூர்வாய் செங்கால் நாராய்" என்பதே மிகச்சிறந்த உவமையாகப் போற்றப்படுகிறது.

இவ்வண்ணமாக வளர்ந்த உவமை தனது நயத்தினால் உவகையையும், எண்ண எண்ண இறும்பூதையும் எய்துவித்து புனைந்த புலவரின் ஆழ்ந்த அறிவையும் புகழையும் உணர்த்தி உலகை மகிழ்விக்கின்றது. இவவுவமைகள் பழமை நிலையினின்றும மாறாமலிருப்பின் சுவை பயப்பதில் குன்றினும் குன்றும். ஆகவே புதுமையும் புகவிட்டு நிலைபெற்று வாழ்க.